பிலிப்பியர்

பவுலின் தனிப்பட்ட உணர்வுகளையும், விருப்பங்களையும் உள்ளமாற வெளிப்படுத்துவது பிலிப்பியர் நிருபமாகும். அவருடைய ஊழியத்தின் அடிப்படையாக விளங்கிய குறிக்கோள்களையும், கோட்பாடுகளையும் இந்நிருபம் காட்டுகிறது. இது யாருக்கு எழுதப்பட்டதோ அந்த விசுவாசிகளுக்கும், பவுலுக்கும் இடையே நிலவிய நெருங்கிய பந்தத்துக்கு இந்நிருபம் ஓர் நிரூபணமாகும். துவக்கத்திலிருந்து அவர்கள் பவுலுக்கு விசுவாசமுடையவர்களாக இருந்தார்கள்.

வரலாற்றுப் பின்னணி

பிலேமோன், எபேசியர், கொலோசெயர் எழுதப்பட்டப் பிற்பாடு, ஒருவேளை, பவுல் ரோமாபுரியில் இரண்டாண்டுகள் இருந்த வீட்டுக் காவலில் முடிவுப்பகுதியில் பிலிப்பியர் நிருபம் எழுதப்பட்டிருக்கலாம் (அப்போஸ்தலர் 28:30-31). அவருடைய விசாரணைக்குப் பிறகு அவர் விடுதலையாக்கப்பட்டு, பிலிப்பியர் விசுவாசிகளோடு தங்கியிருந்து, அவர்களுக்குப் போதிக்கும் சிலாக்கியம் கிடைக்கும் என்ற மன உந்துதல் அவருக்கிருந்தது. இது சீக்கிரத்தில் நிகழும் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டுகிறார் (பிலிப்பியர் 1:23-26).

முதன் முறையாகப் பவுல் ஐரோப்பா கண்டத்திற்குச் சென்ற பொழுது அவர் சந்தித்த முதல் பட்டணமே பிலிப்பி. இது அவருடைய இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் நடந்தது (அப்போஸ்தலர் 16:6-40). இது ரோமர்கள் குடியேறிய இடமும், அப்பகுதியிலிருந்து முன்னோடியான பட்டணமுமாகும். இங்கே லீதியாள், பிலிப்பிய சிறைச்சாலைக்காரன், அவனுடைய வீட்டார் (அப்போஸ்தலர் 16:14,15; 31-34) ஆகியோரைப் பவுல் ஆதாயப்படுத்தினார்.

இந்த பட்டணத்தில் யூதர்கள் வெகுசிலரே இருந்தார்கள் என்பது தெளிவு, ஏனெனில் இங்கு ஜெப ஆலயம் இருந்ததாக லூக்கா (நடபடிகளில்) குறிப்பிடவில்லை.

பொதுவாகப் பவுல் பிரசங்கிக்கும் பட்டணங்களிலெல்லாம் யூதர்களால் உண்டாகும் எதிர்ப்புகள் பற்றியும் ஒன்றும் இதில் சொல்லப்படவில்லை. பவுல் இங்கிருந்து சென்ற பின்பும் லூக்கா இங்கு தங்கியிருந்தார். ஒருவேளை புதிய விசுவாசிகளைக் கண்காணித்திருக்கலாம். பின்னர் லூக்கா பவுலுடன் சேர்ந்து கொண்டார். (அப்போஸ்தலர் 16:10-12-இல் "நாங்கள்" எனக்கு குறிப்பிட்டிருப்பதைக் காண்க. "நாங்கள்" என்னும் பதம் (அப்போஸ்தலர் 20:5,6 வரை மீண்டும் பயன்படுத்தப்படவில்லை).

பொருளடக்கமும், அதன் சுருக்கமும்

விசேஷித்த விதத்தில் பவுலின் மனதையும், இருதயத்தையும் பிலிப்பியரில் காணக் கூடியதாக உள்ளது. அவர் இருந்த சூழ்நிலைகளைப் பற்றிய அவரது மனோபாங்கு (1:12-18), அவர் பின்பற்றிய மாதிரி (2:1-12), அவர் பின்தொடர்ந்த இலக்குகள் (3:7-14), அவருக்கிருந்த நம்பிக்கை (4:12,13,19) ஆகியவற்றை இந்நிருபம் வெளிப்படுத்துகிறது.

இந்தத் தனிப்பட்ட விஷயங்கள் தவிர, இந்நிருபம் முழுவதிலும் இரு இரண்டு மையப்பொருள்கள் உள்ளன. அவை: சுவிசேஷம், சந்தோஷம். கடினமும், நெருக்கமுமான சூழ்நிலை பவுலுக்கு இருந்த போதிலும், அவருடைய இருதயம் மகிழ்ந்து சந்தோஷித்தது (2:17,4:10). கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கும் படி அவர் அநேகந்தரம் பிலிப்பியரை ஊக்கப்படுத்தினார் (2:18;3:1;4:4). அவர் தன் கட்டுகளைக் குறித்துக் கவலைப்படாமல், சுவிசேஷம் பிரபல்யமாவதிலேயே தன் கவனத்தைச் செலுத்தினார். (1:12-18). கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக நடந்து கொள்ளும்படிக்கு வாசகர்களை அவர் ஊக்குவித்தார் (1:27). சுவிசேஷ விஷயத்தில் அவருக்கு உடன் வேலையாட்களாய் இருப்பவர்களின் பெயர்களையும் அவர் குறிப்பிடுகிறார் (4:2,3).

பிலிப்பியர்

பிலிப்பியருக்கு எழுதப்பட்ட நிருபத்தில், வேறொரு முக்கியமான போதனையும் உண்டு. யோவான் 1; எபிரெயர் 1,2; கொலோசெயர் 1அதிகாரங்களோடு கூட பிலிப்பியர் 2:5-11 வசனங்களில் கிறிஸ்துவின் தெய்வீகத்தை வலியுறுத்திக் கூறி; கிறிஸ்து மனிதனானபோது நடந்தது என்ன என்பதை அறிந்து கொள்ளும்படி நமக்கு உதவி செய்கிறார். இந்தப் பகுதிகளைப் பவுல் சேர்த்திருப்பதின் காரணம், முதன்மையான தாழ்மையின் எடுத்துக்காட்டைப் பிலிப்பியருக்கு அளிப்பதே ஆகும்.

பிலிப்பியர்- பவுலின் சாட்சி

1. பவுலின் ஜெபம் (1:1-11).
2. பவுலின் சூழ்நிலைகள் (1:12-26).
3. பவுலின் புத்திமதி (1:27-2:18).
4. பவுலின் திட்டங்கள் (2:19-30).
5. பவுலின் எச்சரிப்புகள் (3:1-4:1).
6. பவுலின் வேண்டுகோள் (4:2,3).
7. பவுலின் எடுத்துக்காட்டு (4:4-9).
8. பவுலின் நன்றி (4:10-23).

பவுலின் ஜீவியமும், போதனைகளும் முற்றிலும் ஒத்திருந்தன. எந்தவித ஒதுக்கீடுமின்றி தன்னுடைய மாதிரியைப் பின்பற்றும்படிக்கும், அவர்கள் அவரிடத்தில் கற்றும், கண்டும் இருந்தவைகள் எவைகளோ அவைகளையே செய்யும்படிக்கும் அவர் பிலிப்பியருக்குச் சொல்லக் கூடியவராயிருந்தார் (3:17;4:9).

பவுலுக்கு கிறிஸ்துவே ஜீவனாயிருந்தார் (1:21). முற்றிலுமாகத் தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்தவருக்குள் தேவ கிருபை எவ்வளவாகக் கிரியை செய்யக் கூடுமென்பதை பவுலின் சாட்சி நமக்குக் காண்பிக்கிறது.

முக்கியமானத் தகவலின் மறுபார்வை:

1. பவுல் தாழ்மையின் உச்ச நிலையைப் பிலிப்பியரில் படம் பிடித்துக்காட்டுகிறார்: "கிறிஸ்து இயேசு...தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்...அவர் சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்" (2:5-8).

2. பவுலின் கஷ்டங்களைப் பகிர்ந்து கொண்டும், அவருக்குத் தேவைகள் இருந்தபொழுது உதவிகள் அனுப்பியும், அவர் காவலில் இருந்தபொழுது வெகுமதிகள் அனுப்பியும் பிலிப்பியர் தங்களுடைய அன்பை அவருக்குக் காண்பித்தனர் (4:10-18).

3. பிலிப்பியருக்கு எழுதப்பட்ட நிருபம் முற்றிலும் தனிப்பட்டதும், அந்நியோந்நியமானதுமாகும். அவர்கள் அவருக்கு அனுப்பிய உபகாரங்களுக்காக நன்றி கூறுகிறார். தனது தனிப்பட்ட உணர்வுகளையும், கோட்பாடுகளையும், விருப்பங்களையும், வெளிப்படுத்துகிறார். இந்த நிருபத்தை, தன்னை அதிகமாக நேசித்து, தன்னிடம் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த விசுவாசிகளுக்குப் பவுல் அனுப்பினார்.

கிறிஸ்துவை அறிவித்தல்
பிலிப்பியர் 1:12-18

முகவுரை

பவுலானவர் இந்தக் கடிதத்தை எழுதும்பொழுது, தான் சிறைச்சாலையில் இருந்தார் என்று தெளிவுபடுத்தியுள்ளார் (1:7,13-14,17). அனேகமாக இந்தச் சிறைச்சாலையானது, அந்த வேளையில் ஒரு வாடகை வீடாக இருந்திருக்கலாம். இரண்டு ஆண்டுகள் சுவிசேஷத்தை தன்னிடத்தில் வருகிற அனைவருக்கும் தடையின்றி பிரசங்கித்தார் (அப்போஸ்தலர் 28:14-31). இந்த இடமானது சுமாராக, கிபி. 61-ம் ஆண்டில் ரோமாபுரியில் இருந்தது.

1. வேறு விசுவாசிகள் தங்களுடைய சாட்சிகளினிமித்தம் துன்புறுத்தப் படுவதைக் காணும் போது, சிலர் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள் (1:12-14).

அ. வசனம் 12. "எனக்கு சம்பவித்தவைகள் சுவிசேஷம் முன்னேறும்படிக்கு ஏதுவாயிற்று." "முன்னேறுதல்" இராணுவச் சொல்லானது, கடினமான நிலத்தின் மேல் யுத்தத்திற்கு முன்னேறிச் செல்லும் சேனையைக் குறிக்கிறது. "எனக்குச் சம்பவித்தவைகள்" பவுலின் சிறையிருப்பையும், ரோமாபுரி நீதிமன்றத்தில் அவர் நின்றதையும் குறிக்கின்றது. பவுலின் சிறையிருப்பு சுவிசேஷத்திற்குத் தடையாக இல்லாமல், அதை முன்னேறச் செய்துள்ளது.

ஆ. வசனம் 13. "அரண்மனையெங்குமுள்ள காவலர்." பவுலின் சிறையிருப்பினால் கைதிகளைக் காவல் புரிந்த 9,000 ரோமாபுரி மெய்க்காவலர்கள் எல்லோரும் பவுலைப்பற்றி அறிந்துகொண்டு, அவர் சிறைச்சாலையில் உள்ளார் என்று அறிந்துகொண்டார்கள். நிச்சயமாக, பவுல் கிறிஸ்துவைத் தரிசனம் கண்டு, இரட்சிக்கப்பட்டு, புறஜாதியாருக்கு ஊழியம் செய்ய அழைக்கப்பட்ட அவருடைய சொந்த சாட்சியைக் கேட்டுக்கொண்டனர் (அப்போஸ்தலர் 22:6-21; 26:12-18).

இ. வசனம் 13. "அன்றியும் எல்லோருக்கும்." "அன்றியும் எல்லோருக்கும்" என்பது, பவுலுடைய சிறையிருப்பையும், விசாரணையையும் கவனித்து வந்த ரோமாபுரியிலுள்ள அனைவரையும் குறிக்கும். அதிலுள்ளவர்கள்:

1. ரோமாபுரியிலுள்ள யூதர்கள் (அப்போஸ்தலர் 28:17,23).

2. அவரிருந்த வாடகை வீட்டிற்கு வந்தவர்கள் அப்போஸ்தலர் 28:30).

3. பிலேமோன் (பிலேமோன் 1ம் அதிகாரம்).

4. கிறிஸ்தவ உடன் ஊழியர்கள்.

ஈ. வசனம் 14. "என்னுடைய கட்டுகளாலே சகோதரர்களில் அநேகர், கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும் அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்". பொதுவாகத் துன்புறுத்தல் வரும்போது விசுவாசிகள் இரகசியமாக வாழ ஏதுவாகிறது. ரோமாபுரியில், அரச வணக்கத்தின் மத்தியில் இராஜாதி இராஜனுமாகிய இயேசுவைப் பின்பற்றுவது விரும்பப்படத்தக்கதாக இருக்கவில்லை. மரணதண்டனைக் குட்படுத்தப் படலாமென்றிருந்த போதிலும் பவுல் சுவிசேஷத்தைப் பயமின்றி அறிவித்ததால், அதைக் கண்ட சபைத் தலைவர்களும், விசுவாசிகளும் கிறிஸ்துவை முன்னைவிட மிகவும் பயமின்றி அதிக தைரியத்துடன் அறிக்கையிட்டார்கள்.

கிறிஸ்துவை அறிவித்தல்
பிலிப்பியர் 1:12-18

உ. யோவானும், பேதுருவும் சுவிசேஷத்தை அறிவித்ததால் துன்புறுத்தப்பட்டு சிறையிலடைக்கப்பட்டபோது எருசலேம் சபையிலும் இதே காரியம் நடந்தது. (அப்போஸ்தலர் 4:1-31).

ஊ. இதே காரியம்தான் இன்றைக்கும் சீனா நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. விசுவாசிகளுடைய துன்புறுத்தலும், சிறையிருப்பும் மற்ற விசுவாசிகளை, தங்களுடைய உயிரை இழக்க வேண்டியது நேர்ந்தாலும், கிறிஸ்துவை தைரியமாகவும் பயமில்லாமலும் அறிவிக்க ஊக்கப்படுத்துகிறது. பவுலுக்கு நேர்ந்தது போல அவர்களுடைய சொந்த நலனையும், பாதுகாப்பையும்விட சுவிசேஷத்தைப் பற்றிய அக்கரை முதன்மை பெறுகிறது.

எ. இந்த 40 வருட காலத்தில், சீனாவின் சபையானது 1940ம் வருடக் கடைசியில் 2,75,000த்திலிருந்து 10 கோடி விசுவாசிகளாக இன்று வளர்ந்துள்ளது. சந்தேகத்திற்கிடமின்றி, "கிறிஸ்துவுக்காகக் கட்டுகளிலுள்ள", சீன விசுவாசிகள், அவர்களுடைய சக கைதிகளிடமும், சிறைக் காவலாளிகளிடமும் தங்களுடைய சாட்சியைக் கூறி, கிறிஸ்துவுக்காக உள்ள சாட்சியினிமித்தம் அவர்கள் கட்டு களிலிருப்பதை உணர்த்தியிருப்பார்கள்.

2. சிலர் பொறாமையினாலும், விரோதத்தினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள் (1:15-17).

அ. வசனம் 15. "சிலர் பொறாமையினாலும், விரோதத்தினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள்." சிறைச்சாலையிலிருந்தபோது பவுல் பயமின்றி சுவிசேஷத்தை அறிவித்தது நல்ல பயனோடிருந்தது.

இதனால் ரோமாபுரியிலிருந்த பிரசங்கிகளும், விசுவாசிகளும் ரோம நகரத்தை கிறிஸ்துவுக்கு ஆதாயப்படுத்த அவனைப் பின்பற்றி, அவனோடு சேர்ந்து கொண்டார்கள்.

ஆ. ஆயினும், புதிதாக ஊக்குவிக்கப்பட்ட பிரசங்கிகள் சிலர் பவுலின் மீது பொறாமை கொண்டனர். பவுலுக்கு தான் ஊழியம் செய்தவர்களிடமிருந்து, தன்னுடைய அடிப்படைத் தேவைகள் எப்பொழுதும் சந்திக்கப்படாதது மற்றவர்களுக்குத் தெரிந்திருந்ததால், அவர்கள் பவுலை விடவும் தங்களை உயர்ந்தவர்களாகக் கருதினர். இக்காரியம் ரோமாபுரியிலுள்ள சபைத்தலைவர்களுக்கு நடக்காமலிருந்திருக்கும். ஆகையால் அவர்கள் இந்தப் பொய்யான வாக்குவாதங்களைப் பயன்படுத்தி கிறிஸ்தவ சமுதாயத்திற்குள் ஒரு குழப்பத்தைத் தூண்டி, பவுலுக்கு எதிராகப் பேசி, அவருடைய நற்பெயரைக் கெடுக்க முயற்சி செய்து, அவர் ஏற்கெனவே அனுபவித்துக் கொண்டிருக்கிற துன்பங்களைக் கூட்டுவதற்கு முயற்சி செய்தார்கள் (வசனம் 17).

இ. இந்த வழியாக அவர்கள், தங்களுக்கு ஒரு பெரிய கூட்டத்தை ஆதாயப்படுத்திக் கொள்ளலாம் அல்லது ஒருவேளை பவுல் சுவிசேஷத்தை அறிவிக்க வருமுன்னால் கிறிஸ்தவ சமுதாயத்திற்குள் அவர்களுக்கிருந்த முக்கியத்துவத்தை திரும்பவும் பெற முயற்சி செய்திருக்கலாம். அவ்வாறில்லாமல் அவர்கள் பவுலுக்கு எதிராகச் சண்டையிட்டு அவருடைய எதிராளியாயினர்.

ஈ. வசனம் 15. "சிலர் நல்மனதினாலும்." பவுலின் தரிசனத்தைப் பிடித்துக்கொண்ட புதிதாக ஊக்குவிக்கப் பட்ட வேறு பிரசங்கிகள் அவருடைய முயற்சியுடன் சேர்ந்து கொண்டார்கள். பவுல் தான் ரோமாபுரியில் கட்டுகளிலிருப்பது கிறிஸ்துவின் உத்திரவினாலேயே சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகவே என்று அவர் அவர்களிடம் சொன்னபோது அவர்கள் நம்பினார்கள் (அப்போஸ்தலர் 23:11).

கிறிஸ்துவை அறிவித்தல்
பிலிப்பியர் 1:12-18

உ. வசனம் 16-17. "சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள், சிலர் கிறிஸ்துவை தற்புகழ்ச்சிக்காவும் அறிவிக்கிறார்கள்". ரோமாபுரி மக்களிடம் சுவிசேஷத்தை அறிவிக்க, பவுலின் முயற்சியோடு சேர்ந்து கொண்டவர்கள் தாங்கள் மனுக்குலத்தின் மீதுள்ள அன்பினால் செயல்படுகிறார்கள். அவர்களுடைய எண்ணங்கள் சுத்தமானவைகள். அவருக்கு உபத்ரவம் உண்டாக்க முயற்சி செய்து, தங்களுக்கு ஒரு திரளான கூட்டத்தை ஆதாயப்படுத்திக்கொள்ள முயற்சி செய்பவர்கள், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க, சுயநல எண்ணங்களினளால் தூண்டப்படுகிறார்கள்.

ஊ. ஒரே பிரதேச சபைத் தலைவர்களுக்குள், போதகர்களுக்குள், உள்ளூர் சபை விசுவாசிகளுக்குள், அன்னிய நாட்டு ஊழிய இடங்களுக்குள் ஏற்படும் பொறாமைகள், தொடர்ந்து இக்கால சபையையும் பிடிக்கிறது. இவை மூன்று வகையானவை:

1. மதப்பிரிவுகளுக்கப்பாலுள்ள பொறாமைகள்.

2. மதப் பிரிவுகளுக்குட்பட்ட பொறாமைகள்.

3. மதப் பிரிவுகளுக்குட்பட்ட சபைத் தலைவர்கள் பிரசங்கிமார், விசுவாசிகளுக்கும், மதப்பிரிவுகளுக்குஉட்படாத மேற் கூறியவர்களுக்கு மிடையே ஏற்படும் பொறாமைகள்.

எ. இந்தப் பிரச்சனையை பவுல் கொரிந்தியருக்கு எழுதும் கடிதத்தில் கூறியிருக்கிறதாவது, "எல்லாம் உங்களுடையதே, பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும்" (1கொரிந்தியர் 3:21-22). கிறிஸ்துவானவரும் இதே பிரச்சனையை இவ்வாறு கூறுகிறார்," நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்" (மாற்கு 9:10).

3. கிறிஸ்து அறிவிக்கப்படுகிறதே முக்கியமான காரியம் (1:18).

அ. "இதனால் என்ன?" ரோமாபுரியிலுள்ள, பொறாமை கொண்ட பிரசங்கிகளால் அதிகமாக்கப்பட்ட துன்பங்கள் அவருக்கு ஒரு பொருட்டாக இல்லை, தனிப்பட்ட மனக் குறைகளை இவர் விவாதிக்க விரும்பவில்லை.

ஆ. "முக்கியமான காரியம் என்னவெனில், வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்" கிறிஸ்து அறிவிக்கப்படுவது பவுலுக்கு மிகவும் முக்கியமான காரியமாக இருந்தது. ஒரு வேளை பேராசையினாலும், உண்மையில்லாமை யினாலும், பொறாமையினாலும், உள்ளந்தரங்கமான நோக்கங்களாக இருந்தாலும் கூட கிறிஸ்து அறிவிக்கப்படுவதே முக்கியமான காரியம்.

இ. "அதனால் சந்தோஷப்படுகிறேன். இன்னமும் சந்தோஷப்படுவேன்". "சந்தோஷப்படுவது" என்பது மகிச்சியையும், அமைதியான சந்தோஷத்தையும், களிப்பையும், மனத்திருப்தியையும் குறிக்கிறது. பவுலுக்கு ஏற்பட்ட இந்த சந்தோஷம் வேகமாக மறையக்கூடிய ஒரு உணர்ச்சி மிக்க சந்தோஷமல்ல, கீழே கொடுக்கப்பட்ட காரியங்கள் தொடரும்வரை, இது மாறாமல் நிலைத்திருக்கிற உள்ளான சந்தோஷமும், மகிழ்ச்சியும் ஆகும்.

1. கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

2. மனிதர்கள் பாவப்பிடியிலிருந்தும் சாத்தான் ஆளுகையிலிருந்தும் விடுதலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்துவை அறிவித்தல்
பிலிப்பியர் 1:12-18

3.கிறிஸ்துமகிமைப்பட்டுக்கொண்டிருக்கிறார். ரோமா புரியிலுள்ள சபையில் உள்ள உண்மையற்ற கிறிஸ்தவர்களினாலும்,சபைத்தலைவர்களினாலும்து ன்பப்படுத்தப்பட்டாலும்,கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டாலும்,அவருடைய சந்தோஷமானது நிலைத்திருந்தது.

ஈ. அமெரிக்காவிலுள்ள இன்றைய சபையில் ஒரு புதிதான, தெளிவான நோக்கமிருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்! சபையிலும், நம்முடைய வாழ்க்கையிலும் எத்தனையோ காரியங்கள் மெதுவாக நுழைந்து இந்தப் பெரிய வேலையை மறைத்துள்ளது. உண்மையில் நாமும் ரோமாபுரியில் பவுலின் நற்பெயரைக் கெடுக்க முயன்ற மக்களைப் போல் மாறியுள்ளோம். சுவிசேஷத்திற்காக யாவற்றையும் தியாகம் செய்பவருக்கு எதிராளிகளாக மாறிவிடுகிறோம். “இது மிக அதிகம்; பயனும் இல்லை. நம்முடைய அதிகமான நேரமும் தேவைப்படுகிறது. மிகவும் கடினமானது” என்று நாம் சொல்லுகிறோம். பாலைவனத்திலிருந்து எகிப்துக்குத் திரும்ப நினைத்த எபிரேயப் பிள்ளைகளைப் போல நாம் மாறியுள்ளோம்.

உ. வடமேற்கில் ஒரு பெரிய சபையில் தலைவர் ஒருவர் இருந்தார். சபைத் தலைவர் சுவிசேஷத்தை அறிவிப்பதைக் கண்டு சபையின் மக்கள் பரிகசித்து வந்தார்கள். அழிந்து போகிற ஆத்துமாக்களுக்கான அவருடைய பாரத்தை அவர்கள் பங்கிட்டுக் கொள்ளாமல், தேவாலயத்தை விட்டு விரட்டி விட்டனர். ஒருவேளை பவுல் இன்றைக்கு அவர்களுடைய சபைத்தலைவராக இருந்திருந்தால் அவரையும் பரிகாசம் செய்திருப்பார்கள். மிக சாத்தியமாக அவரைப் பைத்தியக்காரன் என்றும்,மனக் குழப்பமுடையவன் என்றும் கூறியிருப்பார்கள்.

ஊ. எனக்குத் தெரிந்த கிறிஸ்தவ ஊழியக்காரர்ஒருவர், தான் சேவை செய்யும் இடத்திலுள்ள கலாச்சாரங்களிலும், பள்ளிகளிலும், கோவில்களிலும், விசுவாசிகளின் சமூக சேவைகளிலும் தன்னுடைய பிள்ளைகளை அனுப்ப விரும்பவில்லை, அவர் சொன்ன தாவது இது கேட்பதற்கு அதிகம், கொடுப்பதற்கு எதிர் காலங்கள் ஆபத்தில் முடிந்து விடும். கடவுள் நமக்கு உதவி செய்வாராக!

முடிவுரை

அ. சுவிசேஷத்திற்காக துன்புறத்தப்படுவதைப் பார்த்த போது சிலர் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கின்றனர். இதை நீ விரும்பினால் சீனாவுக்கோ, மத்திய அல்லது தென் அமெரிக்காவிற்கோ செல்,

ஆ. சிலர் கிறிஸ்துவைப் பொறாமையினாலும் போட்டியினாலும் பிரசங்கிக்கிறார்கள். உங்களுடைய சுற்றுப்புறத்தையோ, பட்டணத்தையோ பார்த்தால் இதை நீங்கள் கண்டு கொள்ளலாம்.

இ. கிறிஸ்து அறிவிக்கப்படுவதே முக்கியமான காரியம். பவுலுக்குள்ளிருந்த இரத்த சாட்சியாகும் எண்ணம் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்தது. இது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தால் கூட வரும் அபிஷேகத்தினாலும் வருகின்றது. நம்மில் சிலருக்கு ஞானஸ்நானமும், நம்மில் சிலருக்கு ஒரு புதிய அபிஷேகமும் தேவை.

நம்முடைய சரீரங்களில் கிறிஸ்துவானவர் மேன்மைப்படுதல்
பிலிப்பியர் 1:9-30

முகவுரை

அ. சிறைச்சாலையில் இருந்த போது இரண்டு காரணங்களுக்காக பவுல் சந்தோஷமாக இருந்தார். (மகிழ்ச்சியாக, அமைதியான சந்தோஷத்துடன், திருப்தியை உணர்ந்தவராக, மிக்க இன்பமுள்ளவராக)

1. கிறிஸ்துவானவர் அறிவிக்கப்படுகின்றார்.

2. அவர் தாம் விடுதலையாவோமென்று தன்னம்பிக்கையாயிருந்தார்.

ஆ. கிறிஸ்துவுடன் சேர்ந்து கொள்வது மிக நல்லதாகப் பட்டிருந்தாலும், ஆரம்ப சுவிசேஷக சபைகளுக்கு வரக்கூடிய தாக்குதலைத் தாங்கிக் கொள்ள அவருடைய தொடர்பான ஊழியம் அவர்களுக்குத் தேவையென்று உணர்ந்தார். மேலும் புற ஜாதி மக்களிடையே செய்யும் ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்காக ஸ்பெயின் நாட்டிற்குச் செல்ல விரும்பினார். (ரோமர் 15:24, 28)

இ. எப்படியிருந்தாலும் கிறிஸ்துவானவர் மகிமைப்படு வதையே மிக அதிகமாக விரும்பினார். (வல்லவராக கிறிஸ்து நிரூபிக்கப்படுதல்). சுவிசேஷத்தினிமித்தம் அவர் சரீரத்தில் வரும் துன்பமாக இருந்தாலும் அல்லது அவருடைய ஊழிய வாழ்க்கையாக இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக அவர் இதை விரும்பினார்.

1. நம்முடைய ஜீவனிலாகிலும், சாவிலாகிலும் கிறிஸ்து நம் சரீரத்தில் மகிமைப்பட வேண்டும் (1:19-23)

அ. வசனம் 19. அது உங்கள் வேண்டுதலினாலும், இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன். எல்லா காரியங்களும் நல்லதாகவே முடியுமென்று பவுல் மிகவும் நம்பிக்கையுட னிருந்தார். அவர் சிறையிலிருந்து விடுதலையாகி சபைகளிலுள்ள பரிசுத்தவான்களுடன் தொடர்ந்து ஊழியம் செய்வார் (1:24-26; 2:24). பவுலின் தன்னம்பிக்கைக்கு இரண்டு காரணங்களுண்டு:

1. பரிசுத்த வான்கள் அவருக்காக விண்ணப்பம் பண்ணிக் கொண்டிருந்தனர்.

2. பிதாவின் பரிபூரண சித்தப்படி பரிசுத்த ஆவியானவர் அவருக்காக பரிந்து பேசிக் கொண்டிருந்தார் (ரோமர் 8:27). பவுல் தன்னுடைய விடுதலைக்காக "மிக்க ஆவலுடன்" காத்துக் கொண்டிருந்தார். ஆரம்ப சபையிலுள்ள பரிசுத்தவான்களிடம் திரும்ப சென்று ஊழியம் செய்வது, ஒரு பந்தயக் குதிரை துவக்க வாசலருகில் இருப்பது போல் அவர் உணர்ந்தார்.

ஆ. வசனம் 20. "ஆகையால் எப்பொழுதும் போல இப்பொழுதும் கிறிஸ்துவானவர் என்னுடைய சரீரத்தில் மகிமைப்படுவார்". பவுலின் விசாரணையைக் குறித்து ஒரு தீர்மானம் வரப் போகின்றது. விடுதலையாவோமென்று முழு நம்பிக்கை போடிக்கிறார். கிறிஸ்துவானவர் வல்லமையுள்ளவராக அறிவிக்கப்பட்டதால் கிறிஸ்துவானவர் மகிமைப்படுவதே முதல் பிரதானமானதாக உள்ளது.

இ. வசனம் 21. "மரணமானாலும், ஜீவனானாலும்". பவுலின் மரணமானாலும், அவருடைய வாழ்க்கையானாலும், - ஊழியமானலும் கிறிஸ்துவானவர் வல்லமையானவர் என்று அறிவிக்கப்படுவதே மிகவும் முக்கியமான ஒரு காரியமாக இருந்தது.

நம்முடைய சரீரங்களில் கிறிஸ்துவானவர் மேன்மைப்படுதல் பிலிப்பியர் 1:9-30

கிறிஸ்துவானவரைத் தலைவராகவும், இராஜாவாகவும் மகிமைப்படுத்த பவுலின் சரீரத்திலுள்ள உயிர் இந்த வல்லமையைத் தரும். மேலும் அவருடைய வாழ்க்கையைத் தியாக பலியாக, இரத்த சாட்சியின் மூலம் அளித்தாலும், இந்தக் காரியமும் கிறிஸ்துவானவரின் வல்லமையை அறிவிப்பதாகவே இருக்கும். ஆகையால் எக்காரியம் அவருக்கு ஏற்பட்டாலும் மனிதர்கள் மத்தியில் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவார்.

ஈ. வசனம் 21. "கிறிஸ்து எனக்கு ஜீவன்." பவுலுக்கு கிறிஸ்துவானவர் எல்லாக் காரியமாகவுமாக மாறினார். கிறிஸ்துவை சேவிப்பது ஒன்றே அவருடைய வாழ்க்கைப் பொருளாக உள்ளது. கிறிஸ்துவானவர் ஒருவரே.

1. பாவம், எதிர்ப்பு, சாவிலிருந்து அவரைக் காப்பாற்றினவர்.

2. ஊழியத்திற்கு அவரை அழைத்தவர்.

3. அவர் இப்போது செய்யும் காரியங்களைச் செய்ய ஊக்குவிப்பவர்.

4. சரீரத்தில் அவரை பெலப்படுத்தி ஆவிக்குள்ளாக அவரை வல்லமைப்படுத்துகிறவர்.

5. தனிப்பட்ட முறையில் அவரிடம் பேசி அவருடைய வாழ்விலும், ஊழியத்திலும் அவரை வழி நடத்தினவர்.

6. பரலோகத்தில் தன்னுடன் இருப்பார் என்று வாக்களித்தவர். இதனால் பவுல் அவருடைய எல்லா முயற்சியினாலும் கிறிஸ்துவை மகிமைப்படுத்தவும், மகா வல்லமையுள்ளவர் என்று அறிவிக்கப்படுத்தவும் முயன்றார் *(2 கொரிந்தியர் 5-15; கலாத்தியர் 2:20).*

உ. வசனம் 21-23. "சாவு எனக்கு ஆதாயம்" சாவானது பவுலுக்கும், நம் அனைவருக்கும் பிரசன்னத்தில், பரலோகத்தில் உடனடியாக இருப்பதாகும் (லூக்கா 23;43; 2கொரிந்தியர் 5;6-9). இக்காரணத்தினால் தான் நான் மரித்து கிறிஸ்வுடனிருப்பதையே விரும்புகிறேன் என்று கூறுகிறார். இந்த சரீரத்தில் உலக வாழ்க்கையைத் தொடர்வதைக் காட்டிலும் கிறிஸ்துவுடனிருப்பதே எல்லாவற்றிற்கும் மேலான மிகமிக நல்ல காரியமாகும்.

ஊ. பரலோகத்தில் கிறிஸ்துவுடன் கூட ஒரு முறை இருந்ததால் பவுலுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும் *(2கொரிந்தியர் 12;1-4).* பரிசுத்த யோவானுக்கு தேவன் வெளிப்படுத்துதலில் பார்க்கக் கொடுத்து வைத்த பரலோக மகிமையை சந்தேக மில்லாமல் கொஞ்சம் பார்த்தார் *(வெளிப்படுத்தின விசேஷம் 21:2 முதல் 22:5).*

எ. வசனம் 23. "ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்" என்ற பவுலின் வாக்கானதை நன்றாக நமக்குப் புரிவதற்கு இது உதவுகிறது. "நெருக்கப்படுதல்" என்பது அசைய முடியாதவாறு இரு பக்கங்களிலி மிருந்து வரும் அதிக அழுத்தமாகும் எது நல்லது என்பதை அவரால் தீர்மானிக்க முடியவில்லை:

1. விடை பெற்று கிறிஸ்துவுடனிருத்தல்.

2. சரீரத்தில் தரித்திருந்து சபைகளுக்கு உதவி செய்தல். ஆத்தும நித்திரை அல்லது சுத்திகரிப்பைப் பற்றி பவுல் போதிக்கவில்லை. கவனத்தைக் கவருவதாக உள்ளது. விசுவாசிகள் இறந்த பிறகு உடனடியாக கிறிஸ்து இயேசுவிடனிருக்க பரலோகத்திற்குச் செல்வார்கள் *(2 கொரிந்தியர் 5;8).*

நம்முடைய சரீரங்களில் கிறிஸ்துவானவர் மேன்மைப்படுதல்
பிலிப்பியர் 1:9-30

ஏ. இது பரலோகத்தின் எண்ணமாகவும், உலகத்தின் எண்ணத்திற்கு நேர் எதிரானதாகவும் உள்ளது. அவர்கள் தங்களுடைய சரீரங்களை பழுது பார்த்து, சரி செய்து அவற்றில் நித்தியமாக வாழ நினைக்கின்றனர். அவர்கள் தங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வரை உலகத்தின் உல்லாசங்களையும், பொருட்களையும் அடைந்து அனுபவிக்க விரும்புகின்றனர். பவுல் இந்த சரீரத்திலுள்ள வாழ்வை கண்ணோக்கினது போல, நாமும் காணுமாறு தேவன் நமக்கு உதவி செய்வாராக.

2. நம்முடைய சரீரத்தில் நாம் நிலைத்திருந்தால் கிறிஸ்துவானவர் மகிமைப்படுவார் (1:24-26).

அ. வசனம் 24. "அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்". கிறிஸ்துவான வருடன் இருப்பதான பவுலின் சுய விருப்பங்களைவிடவும், சபையானது பிரதான இடம் கொண்டுள்ளது. அதன் ஆரம்ப கால முன்னேற்றத்தின் போது அதற்கு இன்னமும் அவருடைய நடத்துதல், போதனை, அன்பின் ஊழியம் தேவைப்பட்டது- (எபேசியர் 4:12-14). அவர் ஸ்தாபித்த சபைகளின் உள்ளே நுழைந்து அங்குள்ள ஆடுகளைப் பட்சிக்க, ஓநாய்கள் அவருடைய விடை பெறுதலுக்காகக் காத்துக் கொண்டிருந்தன (அப்போஸ்தலர் நடபடிகள் 20:29-30).

ஆ. வசனம் 25. "இந்த நிச்சயத்தைக் கொண்டிருந்து நான் தங்கியிருப்பேன்". அவருடைய சிறையிருப்பானது இரத்த சாட்சியாக முடியாதென்று பவுலுக்கு மிக அதிக நிச்சயமாயிருந்தது. இந்த சிறையிருப்பாவது நிச்சயமாக அப்படியிருக்காது. சபைத்தலைவர்களின் கடிதங்கள் மூலமும், சரித்திர சாட்சியங்கள் மூலமும் பவுல் இந்த முதலாவது சிறையிருப்பிலிருந்து விடுதலையானாரென்றும், ஸ்பெயின் நாடு உள்பட ஒரு நான்காவது ஊழியப்பிரயாணம் பண்ணினார் என்றும் அறிகிறோம்.

1. (பவுலின் மக்கதோனியா பிரயாணம்) 1தீமோத்தேயு 1:4-ல் பதிவான நிகழ்ச்சி, அப்போஸ்தல நடபடிகளில் பதிவாகவில்லை. ஆகவே இந்த காரியம், முதலாம், இரண்டாம் சிறைவாசத்தின் நடுவே ஏற்பட்டது என்றும், அப்போஸ்தல நடபடிகள் 28-ம் அதிகாரத்திற்குப்பிறகே நடைபெற்றது என்றும் ஊகிக்கப்படுகிறது.

2. தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் கடிதத்தில் "சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்" என்றும் கூறியுள்ளார் (2தீமோத்தேயு 4:17).

3. கிளெமெண்ட்ஸ் ரோமோனஸ் (முதலாம் நூற்றாண்டின் முடிவில்); தந்தைமார் யுசுபியஸ், கிறிஸோஸ்டோமஸ், ஹிரோனிமஸ் என்பவர்கள் எல்லாம் பவுலின் விடுதலையை உறுதிப்படுத்தியுள்ளார். யுசுபியஸ் கூறுகிறார்." பவுல் தன்னை வெற்றிகரமாக வாதாடின பிறகு, பொதுவாகக் கூறப்படுவதாவது, அவர் திரும்பவும் சுவிசேஷத்தை அறிவிக்கச் சென்று, பின்னர் ரோமாபுரிக்கு 2-ம் முறை சென்று அங்கு நீரோ அரசனின் ஆட்சியின் கீழ் இரத்த சாட்சியில் மரித்தார்.

இ. வசனம் 26. "உங்கள் விசுவாசத்தின் வர்த்தனைக் காகவும், சந்தோஷத்திற்காகவும் நான் பிழைத்து, உங்கள் அனைவரோடுங்கூட இருப்பேன்." சிறையிலிருந்து அவர் விடுதலையான பிறகு பவுல் சந்தேகமில்லாமல் பிலிப்பியிலுள்ள சபையையும், ஆசியா மக்கதோனியாவிலுள்ள மற்ற சபைகளையும் சந்தித்திருப்பார்.

நம்முடைய சரீரங்களில் கிறிஸ்துவானவர் மேன்மைப்படுதல் பிலிப்பியர் 1:9-30

ஆனாலும் இக்காரியம் அவருடைய ஸ்பெயின் நாட்டுப் பிரயாணத்திற்குப் பின்பு தான் மிக நிச்சயமாக நடைபெறும்.

ஈ. அவருடைய போதனையினாலும், பிரசன்னத்தினாலும் அவர்கள் தங்களுடைய விசுவாசத்திலுள்ள கிறிஸ்துவைப் பற்றிய ஞானத்திலும் முன்னேறுவார்கள். (உயர்வார்கள்) இது தேவனுக்குள் அவர்கள் மகிழ்ச்சியை (அமைதியான சந்தோஷத்தையும், உற்சாகத்தையும்) அதிகப்படுத்தும்.

உ. அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், பிரசபைத்தலைவர்கள், போதகர்கள் தங்களுடைய சபைகளுக்கு இன்றைக்கு வருவதை, சபைகள் இவ்வாறே காண வேண்டும். பவுலைப்போலவே அவர்கள் தேவனுக்குள் உள்ள விசுவாசத்திலும், மகிழ்ச்சியிலும் முன்னேறுவதை வாஞ்சிக்கிறார்கள். மேலும் பவுலைப்போலவே இந்த ஊழியக்காரர்கள்.

1. கர்த்தருக்குள் இருப்பதையே விரும்புவார்கள்.

2. அர்களுக்கு ஊழியம் செய்வதற்காக அதிகமாக தியாகம் செய்வார்கள்.

3. கிறிஸ்து அவர்கள் சரீரங்களில் மகிமைபடைவதைக் காண வாஞ்சிப்பதால், ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

3. சுவிசேஷத்திற்கு பாத்திரமாகும்படி நாம் நம்மை நடத்திக்கொள்ளும்போது கிறிஸ்து மகிமைப் படுகிறார் (1:27-30).

அ. வசனம் 27. "எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்". "எவ்விதத்திலும்" என்பது எல்லாக் காரியங்களுக்கும் மேலாக, என்ன நேரிட்டாலும் என்று அர்த்தமுடையதாகும். மேலும், "சுவிசேஷத்திற்குப் பாத்திரராக" என்பது சுவிசேஷத்தோடு ஒத்துப்போகிற நல்லநெறியோடு நடத்திக்கொண்டால், இக்காரியம் நடைபெறுகிறது. ஆகவே, அவர்கள் தங்களை நெறியற்ற முறையில் நடத்திக் கொண்டால் கிறிஸ்துவானவர் உயர்ந்தவரல்லாதவராகக் காணப்படுவார்.

கடைசியாகக் கூறிய காரியம் மிகக்கூடுதலாக அமெரிக்க சபைகளில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது!

ஆ. வசனம் 27. "நான் வந்து உங்களை கண்டாலும் நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் தரித்திருக்கிறீர்களென்பதை நான் அறிவேன்". அவர்களை நேரில் சந்தித்தாவது அவர்களுடைய ஒழுக்கத்தைப் பற்றி அவரை சந்திப்பவர்களிடமிருந்து கேட்டுக்கொண்டாவது பிலிப்பிய சபை எவ்வாறு அதை நடத்திக்கொண்டிருக்கிறது என்று பவுல் அறிந்து கொள்ள முடியும். "ஒரே ஆவியிலே உறுதியாகத் தரித்திருத்தல்" என்பது ஒரு பொதுவான விருப்பத்தைக்குறிக்கிறது. சுவிசேஷ செய்தியோடு சம்பந்தப்பட்ட, ஒத்த குறிக்கோள்கள் இருப்பதைக் குறிக்கிறது. இந்தக் குறிக்கோள்களுடனும், விருப்பத்துடனும், சம்பந்தப்பட்டு அசையாது, உறுதியாக இருத்தலைக் குறிக்கிறது.

இ. வசனம் 27. "ஒரு மனிதனைப் போல் விசுவாசத்திற்காகப் போராடி". இந்த ஐக்கியமானது (ஒரு ஐக்கிய முன்னணியாக) விசுவாசத்திற்காகப் போராடும்போது, துன்புறுத்தும் நேரங்களிலே, அதிகமாக இருக்கிறது. சீனா, வியட்நாம், கம்போடியா, லாவோஸ், ஈரான், ஈராக், மத்திய, தென் அமெரிக்காவிலுள்ளசபைகளை

நம்முடைய சரீரங்களில் கிறிஸ்துவானவர் மேன்மைப்படுதல் பிலிப்பியர் 1:9-30

அமெரிக்கவிசுவாசிகள் பார்த்தால்நவமாயிருக்கும்இவர்கள் விசுவாசத்திற்காக ஒரு மனிதனைப் போல் போராடுகிறார்கள். அவர்கள் ஜீவித்திருப்பதற்கும், சுவிசேஷத்தைப் பரப்புவதற்கும், ஒருவர்க்கொருவர் தேவையாயிருந்து எல்லாரும் ஒற்றுமையுடன், ஒரே மனிதனைப்போல் நிற்கவேண்டும்.

ஈ. வசனம் 27. “உங்களை எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்க”. இதற்கு அர்த்தமென்னவென்றால் சுவிசேஷத்திற்கு எதிர்ப்புகளை நீங்கள் சந்திக்க நேரிட்டால், மிரண்டு போன ஒரு குதிரைகளின் கூட்டம் பயந்து ஓடுவதைபபோல் மாறி விடாதீர்கள். உங்களை எதிர்ப்பவர்கள் இப்படிப்பட்டவர்கள் தான்:

1. ஒவ்வொரு பட்டணத்திலும் சுவிசேஷத்தை எதிர்க்கும் ஜனத்தாரிலுள்ள செல்வந்தர்கள், அறிவாளிகள், விக்கிரகாராதனைக்காரர் ஆகும்.

2. பவுலையும் அவருடைய “விசுவாசத்தின் மூலமே இரட்சிப்பு” என்ற சுவிசேஷத்தின் மீதும், ஜனங்களைக் கிளப்பி, கலகமுண்டாக்க, ஒரு யூதசக்தியானது எப்பொழுதுமே இருந்தது (அப்போஸ்தலர் 17:5,13).

உ. இன்றைக்கு அமெரிக்காவில் நம்முடைய எதிராளிகள்பணக்காரர்களாகவும், அறிவாளிகளாகவும்,பாவத்திலும்,தீய காரியங்களில் ஈடுபடுபவர்களாகவும், பொய்யான மத அமைப்புப் போதனைகளுக்குஒத்துக்கொள்பவர்களாகவும்இருக்கின்றனர்.மேலும்,சமீப காலத்தில் அரசாங்கங்களும், தலைமை நீதி மன்றமும், (சட்ட நிபுணர் சங்கம் உட்பட) பெண் சம உரிமையாளரும், ஓரினசேர்க்கையாளரும், கருகலைப்பவர்களும், மந்திரவாத சூனியவித்தைக் காரரும் கூட நமக்கு எதிராக எழும்பிவிட்டனர்.

ஊ. வசனம் 28. “அவர்களுக்கு இது அத்தாட்சியாக இருக்கிறது...” விசுவாசத்திற்காக ஒரு மனிதனைப் போல போராடி உறுதியாக நிற்பதினாலும், நம்மை எதிர்ப்பவர்களால் பயப்படாமல் இருப்பதினாலும் பயன்கள் உள்ளன:

1. அழிவிற்குச் செல்கிறோமென்று நம்முடைய எதிராளிகள் உணர்ந்து கொள்ளத் தொடங்குகின்றனர்.

2. இது சிலரை மனந்திரும்பவும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் செய்கிறது. ஆயினும், மற்றவர்கள் நமக்கு எதிராக, மிக அதிகமாக, எதிராளிகளாகின்றனர்.

எ. வசனம் 29. “ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுவதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது”. முழு உலகத்தின் மீதும் வரப்போகிற தேவ கோபாக்கினையிலிருந்து கடைசிவரை நிலைத்து நிற்கும் விசுவாசிகள் தாங்கள் காப்பாற்றப்படுவோம் என்பதை அறிந்திருக்கின்றனர். இக்காரியத்தினால் தீய மனிதர்களின் கைகளில் இவர்கள் துன்புறுத்தப்படமாட்டார்கள் என்று அர்த்தமாகாது. “தன்னுடைய எஜமானனைவிட எந்த வேலைக்காரனும் பெரியவனல்ல. கிறிஸ்துவைத் துன்புறுத்தியிருந்தால் நம்மையும் துன்புறுத்துவார்கள்” (யோவான் 15:20) “அன்றியும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்” (2தீமோத்தேயு 3:12).

நம்முடைய சரீரங்களில் கிறிஸ்துவானவர் மேன்மைப்படுதல்
பிலிப்பியர் 1:9-30

ஏ. வசனம் 30. "நீங்கள் என்னிடத்திலே கண்டதும், எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு". பவுல் தன் சிறையிருப்பினிமித்தம் மட்டும் கஷ்டப்படாமல், அவருடைய முழு ஊழியத்திலும் கஷ்டப்பட்டார் (2கொரிந்தியர் 11:24-29). கிறிஸ்துவும் இவ்வாறே கஷ்டப்பட்டார். இதே விதிக்கு நம்மை அப்போஸ்தலரானவர் தயாராகும்படி முயற்சி செய்கிறார். ஆனால் இக்காரியம் கொஞ்ச காலம் மட்டுமே. சமாதானத்தின் தேவன் வெகு சீக்கிரமாக சாத்தானை உன்னுடைய கால்களின் கீழ் நசுக்கிப்போடுவார் (ரோமர் 16:20). பேதுரு நம்மிடம் கூறுகிறார்.

"கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால், தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல தங்கியிருக்கிறார். (1பேதுரு 4:13,14).

முடிவுரை

அ. எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவானவர் மகிமைப்பட்டு நம்மூலம் பெரியவராக காணப்படவேண்டும். கீழ்கண்ட எதுவாகிலும்:-

1. நம்முடைய தனிப்பட்ட வாழ்வில்

2. சபையின் சரீர வாழ்வில்

3. சுவிசேஷத்தினிமித்தம் நம்முடைய கஷ்டப்படுதலின் மூலமும், மரித்தலின் மூலமும். கிறிஸ்துவைத் தேடியடையும் வரை அவர்கள் அழிவின் பாதைக்குச் செல்கிறார்கள் என்பதற்கு, உலகத்திற்கு இது ஒரு அத்தாட்சியாக உள்ளது.

ஆ. நீ வாழ்ந்து, அறிவிக்கின்ற சுவிசேஷ செய்தியையும், உன்னையும் எதிர்ப்பவர்களைக் கண்டு நீ பயப்படாதே, தேவனானவர் அவருடைய கையில் உன்னைப் பத்திரமாக வைத்து, முழு உலகத்தின் மீது வரப்போகின்ற கோபாக்கினையிலிருந்து உன்னை மிக சீக்கிரமாக விடுதலை செய்வார்.

இ. ஆனால் நாம் சிறிது காலம் துன்பப்படவேண்டும். ஆகையால் நாம் அனைவரும் இக்காலத்தில் பெரிய போராட்டங்களிலும், துன்பங்களிலும் இடையே போய்க் கொண்டிருக்கிறவர்களுக்காக ஜெபிக்கவும், ஆறுதல் கூறவும் வேண்டும்.

இன்று இங்கிருக்கிறோம், நாளை மரித்துப்போகிறோம் (பிலிப்பியர் 1:21-23).

முகவுரை

அ. பிலிப்பியருக்கு அவர் இந்தக் கடிதத்தை எழுதும்போது, பவுலானவர் ரோமாபுரி சிறையிலிருந்தார். ஆனாலும், அவர் சந்தோஷமாக இருந்தார் (மகிழ்ச்சியாக, அமைதியான சந்தோஷத்துடன், திருப்தியை உணர்ந்தவராக, மகிழ்ச்சியில் துள்ளியவராக). இவர் மகிழ்ந்திருப்பதற்கு இரண்டு காரணங்களுள்ளன:-

1. கிறிஸ்துவானவர் அறிவிக்கப்படுகிறார்.

2. அவர் தாம் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாவோமென்று தன்னம்பிக்கையாயிருந்தார்.

ஆ. கிறிஸ்துவுடன் சென்று சேர்ந்திருப்பது இவருக்கு மிகவும் நல்லதாகப் பட்டிருந்தது. ஆனால்ஆரம்ப சுவிசேஷக சபைகளுக்கு அவருடைய உதவி தேவையாயிருக்கிறதென்பதை அவர் அறிந்திருந்தார். மேலும், புறஜாதி மக்களிடையே செய்யும் ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்காக ஸ்பெயின் நாட்டிற்குச் செல்ல விரும்பினார் (ரோமர் 15:24,28).

இ. இன்றிருக்கும் நம் அனைவரையும் போலவே,நாம் இன்று உயிருடனும், நாளை மரிப்பதையும் பவல் அறிந்திருந்தார். ஆகையால் அவர் இங்கிருக்கும் பொழுதே தன்னால் தேவனுக்குச் செய்யக்கூடிய எல்லாக் காரியங்களையும் செய்ய விரும்பினார். மேலும், அதிகமான கிறிஸ்தவர்கள் அவருடைய கவலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்!.

1. நாம் இன்று இங்கிருக்கிறோம் நாளை நம்சரீரத்தை விட்டுப் பிரிந்திருப்போம் (1:21-23).

அ. வசனம் 21-23 "சாவு ஆதாயம்". பவுலுக்கும், நம்மனைவருக்கும் சாவானது என்ன அர்த்தமெனில், உடனடியாக கிறிஸ்துவின் பிரசன்னத்தில், ஒரு வானுலக பரதீசில் இருத்தலே ஆகும் (லூக்கா 23:43; 2கொரிந்தியர் 5:6-9).

ஆ. இக்காரணத்தினால் தான் நான் மரித்து கிறிஸ்துவுடனிருப்பதையே விரும்புகிறேன் என்று கூறுகிறார். இந்த சரீரத்தில் உலக வாழ்க்கையைத் தொடர்வதைக் காட்டிலும் கிறிஸ்துவுடனிருப்பதே எல்லாவற்றிற்கும் மேலான மிக மிக நல்ல காரியமாகும்.

இ. பரலோகத்தில் கிறிஸ்துவுடனே கூட ஒருமுறை இருந்ததால் பவுலுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும் (2கொரிந்தியர் 12:1-4). பரிசுத்தயோவானுக்கு தேவன் வெளிப்படுத்துதலில் பார்க்கக்கொடுத்து வைத்த பரலோக மகிமையை சந்தேகமில்லாமல் கொஞ்சம் பார்த்தார் (வெளிப்படுத்தின விசேஷம் 21:2-22:5).

ஈ. வசனம் 23. "ஏனெனில் இவ்விரண்டிலும் நான் நெருக்கப்படுகிறேன்" என்ற பவுலின் வாக்கானதை நமக்குப் புரிவதற்கு இது உதவுகிறது. "நெருக்கப்படுதல்" என்பது இந்தப் பக்கத்திலும், மற்ற பக்கத்திலும் அசைய முடியாதவாறு இருபக்கங்களிலுமிருந்து வரும் அதிக அழுத்தமாகும்.

உ. எது நல்லது என்பதை அவரால் தீர்மானிக்க முடியவில்லை:

1. விடைபெற்று கிறிஸ்துவுடன் பரலோகத்திலிருத்தல்.

2. சரீரத்தில் தரித்திருந்து சபைகளுக்கு உதவி செய்தல். ஆத்தும நித்திரை அல்லது சுத்திகரிப்பைப்பற்றி பவுல் பேசாதது கவனத்தை கவருவதாக உள்ளது.

இன்று இங்கிருக்கிறோம், நாளை மரித்துப்போகிறோம் (பிலிப்பியர் 1:21-23).

விசுவாசிகள் இறந்த பிறகு உடனடியாக கிறிஸ்து இயேசுவுடனிருக்க பரலோகத்திற்குச் செல்வார்கள் (2கொரிந்தியர் 5:8).

ஊ. இது பரலோகத்தின் எண்ணமாகவும், உலகத்தின் எண்ணத்திற்கு நேர் எதிரானதாகவும் உள்ளது. அவர்கள் தங்களுடைய சரீரங்களை சரிசெய்து, பழுது பார்த்து அவற்றில் நித்தியமாக வாழ நினைக்கின்றனர். அவர்கள் தங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வரை உலகத்தின் உல்லாசங்களையும், பொருட்களையும் அடைந்து அனுபவிக்க விரும்புகின்றனர்.

எ. இதே காரணங்களுக்காகவும் சரீரத்தில் தரித்திருந்தோ அல்லது விடைபெற்று கிறிஸ்துவுடன் இருப்பதற்கோ என்று நெருக்கப்பட்டு இந்த சரீரத்தில் உள்ள வாழ்வை பவுல் கண்ணோக்கினது போல நாமும் காணுமாறு தேவன் நமக்கு உதவி செய்வாராக.

2. நாம் இன்று இங்கும், தேவனுடன் நாளையும் இருக்கிறோம் (2கொரிந்தியர் 5:6-9).

அ. வசனம் 7. "இந்த தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோம்மென்று அறிந்தும் எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்'' "நம்பிக்கை'' என்ற வார்த்தையானது நல்ல தைரியத்தைக் குறிப்பதாகவும், தேவனானவர் எல்லாவற்றையும் தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார் என்றும் அறிவதாகும்.

மேலும், பவுலுக்குள் பிரவேசித்த பரிசுத்த ஆவியானவர் ஒருவர்தான் அவருடன் எப்பொழுதும் இருந்ததால் பவுலுக்குத் தொடர்ந்து அவருடைய தைரியத்தையும், நம்பிக்கையையும் அளித்தார். இவருக்கு இந்த தைரியத்தை அளித்தார்:-

1. சோதனைகளினிமித்தமும், பிரச்சனைகளினிமித்தமும் அவருடைய ஊழியத்தைத் தொடர.

2. எதிர்காலத்தை நோக்கி அவர்களுடைய சாவைப்பற்றி சிந்திக்க.

ஆ. ஒரு மனிதன் தன்னுடைய சரீரத்தை விடுவதாக சிந்திக்கும் பொழுது, இயற்கையாக ஒரு இழப்பான எண்ணம் உண்டாகிறது. தேவனோடு பரலோகத்தில் இருக்கலாம் என்ற, வரப்போகின்ற நல்ல காரியத்தை அறிவதால் இந்த எண்ணம் மேற்கொள்ளப்படுகிறது.

இ. வசனம் 16. "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்." நாம் இன்னமும் தேவனோடு இருக்கவில்லை. அவரை நாம் இன்னமும் அவருடைய மகிமையான சரீரத்தில் பார்க்கவில்லை ஆனால் விசுவாசத்தினால்.

1. நாம் அவருடனிருப்போம் என்று நாம் அறிகிறோம்.

2. நாம் அவரைப் போல் இருப்போம் என்றும் அறிகிறோம் (1கொரிந்தியர் 15:49).

ஈ. வசனம் 8. "நாம் தைரியமாகவேயிருந்து, இந்த தேகத்தை விட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்." நாம் இன்று இந்த சரீரத்தில் இங்கு இருக்கிறோம். ஆனால் நாளை நாம் இந்த சரீரத்தை விட்டு தேவனோடிருப்போம். இந்த விருப்பமானது கர்த்தருக்குள் முதிர்ச்சியடையும்போதும்,

இன்று இங்கிருக்கிறோம், நாளை மரித்துப்போகிறோம் (பிலிப்பியர் 1:21-23).

பூரண வளர்ச்சியடையும்போதும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

உ. வசனம் 9 "அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும், குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்" "ஜீவனோடிருந்தாலும், ஜீவனில்லாமலிருந்தாலும், உயர்ந்த ஏற்றமாயிருந்தாலும், நல்ல நேரமாயிலும், கெட்ட நேரமாயிலும் தேவனைப் பிரியப் படுத்துவதே நம்முடைய குறிக்கோளாக இருக்கிறது" என்று நாம் எல்லோரும் இன்று சொல்வோம்.

ஊ. "தேவனைப் பிரியப்படுத்துவதையே நம்முடைய குறிக்கோளாக அமைத்துக்கொள்ளவேண்டும்" என்பதற்கு, தேவனை சந்தோஷப்படுத்த வாழப்போகின்ற வாழ்க்கையை நம்முடைய குறிக்கோளாக ஆக்கி, மிக விருப்பமாக தூண்டுகிறதாகும். கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்னர் நாம் எல்லாரும் நிற்க வேண்டுமென்று அறிந்திருப்பதால், இந்த உள்ளுணர்வானது வருகிறது என்று பவுல் கூறுகிறார்; நாம் சரீரத்தில் இருந்தபோது செய்திருந்த காரியங்களுக்கு நமக்கு வெகுமதி அளிக்கப்படும் நேரம் (வசனம் 10).

3. நாம் இன்று இங்கிருக்கிறோம். நாளை பரலோக வீட்டில் இருப்போம் (யோவான் 14:2-3).

அ. வசனம் 2 "என் பிதாவின் வீட்டில் அனேக வாசஸ்தலகங்கள் உண்டு".

இயேசுவை நம்புகிறவர்களுக்கு ஒரு நித்திய வாழும் இடம், ஒரு ஸ்தலம், ஒரு மாளிகை உண்டு. நிறைய வாழும் இடங்களும், நிறைய ஸ்தலங்களும், நிறையமாளிகைகளும் எல்லாருக்கும் உண்டு. தேவனுடைய வீட்டில் ஒருவரும் இடமில்லாமல் போகமாட்டார்கள்.

ஆ. மேலும் இந்த நிலைமை கொண்டிருக்கும் நாட்களெல்லாம் முடிந்து விடும். ஒரு சிறிய சந்தேகம் கூட உங்களுடைய மனதில் எழும்ப இடமளிக்காதீர்கள். இயேசு சொல்கிறார், "அப்படி இல்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்.

இ. வசனம் 2. இயேசு எப்பொழுது பரலோகத்தில் இருக்கிறார். மேலும் நம் ஒவ்வொருவருக்கும் இடங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். "ஆயத்தப்படுத்துதல்" அர்த்தம் என்னவென்றால். "உடனடியாக தங்குவதற்கு ஏற்பாடு செய்தல்" அவர் போவதற்கு இதுதான் காரணம்.

ஈ. வசனம் 3. நம்முடைய இடங்களை அவர் ஆயத்தம்பண்ணி முடித்த பிறகு திரும்பவும் வந்து, "நம்மை அவரோடு இருக்கும்படி பரலோகத்திற்கு எடுத்துச்செல்வார்" எடுத்துக்கொள்ளப்படுவதற்கு இது ஒரு குறிப்பாக உள்ளது. நாம்:

1. "ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு தேவனை, கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்போம்" (1தெசலோனிக்கேயர் 4:17).

2. அழியக்கூடிய நம் சரீரமானது அழியாமையைத் தரித்துக்கொள்ளும் (1கொரிந்தியர் 15:51-52).

3. பரலோகத்திலுள்ள இராஜ்ஜியங்களுக்கும், சக்திகளுக்கும் முன்னால் நாம் அறிக்கையிடுவோம்: 'மரணமே! உன் கூர் எங்கே! பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (ஓசியா13:14; 1கொரிந்தியர் 15:55).

இன்று இங்கிருக்கிறோம், நாளை மரித்துப்போகிறோம் (பிலிப்பியர் 1:21-23).

உ. பவுல் சொல்கிறபோது இதை நமக்கு ஞாபகப் படுத்துகிறார், "நமது ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையானது, நம் தேவனும், இரட்சகருமான இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து மகிமையாய் தோன்றி, (நம்மை நம் பிதாவின் வீட்டிலுள்ள நம் இடத்திற்குக் கொண்டு போவார்)" (தீத்து 2:13).

ஊ. ஆதி பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே இவர்களின் காலங்களிலிருந்து தேவன் தம்முடைய மக்களுக்கு ஒரு சமாதானமான நாட்டை, ஒரு இளைப்பாறும் இடத்தை எப்பொழுதும் வாக்களித்திருக்கிறார் (ஆதியாகமம் 12:6; 50:24-25; யாத்திராகமம் 3:7-8).

எ. இது இன்றும் நமக்குள் இப்படியே இருக்கிறது. திரும்ப வந்து தம் பிதாவின் வீட்டில் அவருடன் இருக்க அழைத்தும் செல்வேனென்று இயேசுவானவர் வாக்களித்திருக்கிறார். இது நமக்கு உத்தரவாதமுள்ள, சமாதானமான, அமைதியான, ஓய்வான இடமாகும். நமக்கு சொந்த இடம் இருக்கும். இது நம் குழப்பமான இருதயங்களை அமைதிப்படுத்தும்! நாம் இன்று இங்கிருக்கிறோம், ஆனால் நாளை நம்முடைய பரலோக வீட்டில் இருப்போம்!

முடிவுரை

அ. நாம் இன்று இங்கு இருக்கிறோம், நாளை போய் விடுவோம் நாம்:

1. இன்று இங்கு, ஆனால் நாளை சரீரத்தை விட்டுப்போய் விடுவோம்.

2. இன்று இங்கு, ஆனால் நாளை கடவுளுடன் இருப்போம்.

3. இன்று இங்கு, ஆனால் நாளை பரலோக வீட்டில் இருப்போம்.

ஆ. அதனால் நமக்கு இரண்டு வித முக்கிய எண்ணங்கள் உண்டு.

1. நம் சரீரத்தில் இப்போது இருக்கும் போது தேவனை எப்படி பிரியப்படுத்தலாம்? நாம் நல்ல காரியங்களுக்கும், நேர்மையான வாழ்க்கைக்கும் உந்தப்படுவது ஏனென்றால் என்றாவது ஒருநாள் கிறிஸ்துவுடைய நியாயாசனத்திற்கு முன்னர் நின்று நம் சரீரங்களில் பண்ணியிருந்த காரியங் களுக்கு நாம் வெகுமதி அடைவோம் என்று நமக்குத் தெரியும்!

2. நாம் என்று விடை பெற்று தேவனோடு பரதீசில் இருப்போம்? நாம் கிறிஸ்துவோடு இருக்கவே விரும்புகிறோம். ஆயினும் இவ்விரண்டிற்கும் இடையே சிக்கித் தவிக்கிறோம். கிறிஸ்துவைப் பிரியப்படுத்தும் காரியங்களை இந்த உலகத்தில் தங்கி செய்வதா, அல்லது தேவனோடு நித்தியத்தில் போய் சேர்ந்து விடுவதா? இவ்விரண்டில் எதைப் தெரிவு செய்வது என்று தெரியாமல் தவிக்கிறோம்,

BELLWETHER INTERNATIONAL
GOOD NEWS PUBLISHERS

சபைகளின் ஒற்றுமைக்காக ஒரு வேண்டுகோள் (பிலிப்பியர் 2:1-8)

முகவுரை

அ. நமது வேதாகமப் பகுதியில் பவுல், பிலிப்பிய சபையின் விசுவாசிகளுக்கு, ஒற்றுமைக்காக ஒரு வேண்டுகோள் விடுக்கிறார். கிறிஸ்துவானவருடன் அவர்களுக்குப் புதிதாகக் கிடைத்த தொடர்பினிமித்தம் உள்ள நான்கு ஆதாயங்களைக் கூறி அவருடைய வேண்டுகோளை தொடங்குகிறார்.

1. அவருடன் இணைந்திருப்பதால் கிடைத்துள்ள ஆறுதல்.

2. அவருடைய அன்பினால் கிடைத்த தேறுதல்.

3. பரிசுத்த ஆவியானவருடன் உள்ள ஐக்கியம்.

4. உருக்கமான அன்பும், இரக்கமும். மேலும் இரண்டாவதாக பவுலானவர் சபையில் ஒற்றுமைக்காக வேண்டுகோள் விடுக்கிறார்.

ஆ. ஒரு ஆரம்பகால, கிறிஸ்தவ துதிபாடலாக, பிலிப்பியர் 2:6-11 வசனங்களைப் பலர் கருதுகின்றனர்.

1. விசுவாசிகள் ஏக சிந்தையுடனிந்தால் சபையில் ஒற்றுமை இருக்கும் (பிலிப்பியர் 2:2)

அ. "என்னுடைய சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்". சுவிசேஷத்திற்காக பவுல் ரோமபுரிச் சிறைச்சாலையில் இருக்கிறார் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். ஆகையால் பிலிப்பிப்பட்டணத்து விசுவாசிகள், அவருடைய கஷ்டங்களின் நடுவில் அவர் சந்தோஷப்பட அவர்கள் விரும்பினால் நிச்சயமாக அவர் அவர்களிடம் செய்ய சொன்ன காரியங்கள் எல்லாவற்றையும் செய்வார்கள்! "அவருடைய சந்தோஷத்தை நிறைவாக்குதல்" என்பதற்கு அர்த்தம் அவரை முழுவதுமாக அமைதியாக இருக்கப்பண்ணுவது, மகிழ்ச்சிப் படுத்துவது, ஆறுதல்படுத்துவது ஆகும்.

ஆ. "ஒரே சிந்தையாக இருப்பது". "ஒரே சிந்தையாக இருப்பது" என்பதற்கு அர்த்தம்

1. ஒரே காரியங்களை சிந்தித்தல்.

2. ஒரே காரியங்களினால் உந்தப்படுதல்.

3. ஒரே இலட்சியங்களும், ஒரே குறிக்கோளுமாக இருத்தல்.

இ. இந்த சில காரியங்கள் என்னவாக இருக்கும்? இது நிச்சயமாக சபையில் முக்கிய குறிக்கோளை உடையதாக இருக்கும்.

1. உலகத்திலுள்ள வேறு நாடுகளிலும், நம்முடைய நண்பர்கள் மத்தியிலும், அண்டை வீட்டார், உறவினார் மத்தியிலும், நம் ஜனங்கள் மத்தியிலும் சுவிசேஷம் அறிவிக்கப் படுவதைப் பார்ப்பது.

2. விசுவாசிகளை சீஷத்துவப்படுத்துவது.

3. தெய்வ வழிபாடு, கீழ்கண்ட காரியங்களைக் கொண்டதாக இருக்கும்.

அ. நம்மை அர்ப்பணிப்பது, நேரத்தையும், தசம பாகங்களையும், விசேஷித்த காணிக்கைகளையும் தேவனுக்கு கொடுப்பது.

ஆ. உபவாசிப்பதும், ஜெபிப்பதும்.

இ. துதிப்பது, வழிபாடுவது, நன்றி செலுத்துவது.

சபைகளின் ஒற்றுமைக்காக ஒரு வேண்டுகோள் (பிலிப்பியர் 2:1-8)

இ. "ஆனால் தாழ்மையுடன்." மனத் தாழ்மை சுயநல ஆசைகள், வீண் பெருமை என்ற இரண்டிற்கும் பரிகாரமாகும். இந்த இரண்டு குணங்களை விட மனத் தாழ்மையானது ஒற்றுமையைக் கொண்டு வருகிறது. இதற்கு அர்த்தம் என்னவென்றால்:

1. நம்மைப்பற்றி ஒரு அடக்கமான எண்ணம் இருத்தல்.

2. நம்முடைய குறைகளுக்குள்ள காரணங்களை ஆழ்ந்து அறிதல்.

3. நாம் எவ்வளவு அற்பமானவர்கள் என்று உணர்ந்து கொள்ளுதல்.

ஈ. "உங்களைவிட மற்றவர்களை மேன்மையானவர்களாக எண்ணுங்கள்". இதற்கு அர்த்தம் என்னவென்றால், நாம் மற்றவர் களை விசேஷித்த நடத்துதலுக்குத் தகுதியானவர்களென்று காண வேண்டும். அனேக காரியங்களில் நம்மை விட மற்ற விசுவாசிகள் மேன்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள். நம்மைப் பற்றியுள்ள, பெருமைகளை வெளிப்படுத்த முயற்சிக்கிற ஆசையைத் தவிர்த்து, தேவனுடைய மகிமைக்காக அவர் களுக்குக் கொடுத்துள்ள திறமைகளையும், அருட்கொடை களையும் உணர்ந்து பாராட்ட வேண்டும். தற்கால சமுதாயம் இந்த எண்ணத்தை ஆதாரிப்பது இல்லை. உண்மையாக எதிர் பதத்தைதான் ஊக்குவிக்கிறது. ஆனாலும் இன்று நம்முடைய சபைகளில் ஒற்றுமையிருக்க வேண்டுமென்றால் இது கண்டிப்பாக செய்ய வேண்டியது.

உ. இந்தக் காரணத்தினால் தான் பேதுரு கூறுகிறார், "நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்" (1பேதுரு 5:5-6). மேலும், பவுல் ரோமருக்குக் கூறும் பொழுது, "கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்" (ரோமர் 12:10).

ஊ. பிலிப்பிய சபையிலிருந்த சுயநல ஆசை, வீண் பெருமை, இன்றைக்கும் உலகத்திலுள்ள சபைகளில் இப்பொழுதும் இருக்கிறது. வெவ்வேறு வடிவங்களில் மறுபடியும் தோன்றும். இப்படி இருந்த போதிலும் விசுவாசிகள் தங்களை விட மற்றவர்களை மேன்மையாகக் கருதினால் உள்ளூர் சபைகளில் ஒற்றுமை இருக்கும்.

3. விசுவாசிகள் பிறருடைய காரியங்களை அக்கறையாக நோக்கினால் சபையில் ஒற்றுமையிருக்கும் (2:4).

அ. "அவனவன்". கிறிஸ்துவுக்குள் உள்ள மற்ற எல்லாக் காரியங்களைப் போல், இது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள ஒரு தனிப்பட்ட காரியமாகும்.

ஆ. "அவனவன் தனக்கானவை களையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக". நாம் நம்முடைய காரியங்களையும், நம்முடைய குடும்பத்தினுடையவைகளையும் அக்கறையாக நோக்க வேண்டும். பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார், "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1தீமோத்தேயு 5:8).

இ. நாம் எப்படியாகிலும் மற்றவர்களுடைய காரியங்கள் மேல் சமசிரத்தையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

சபைகளின் ஒற்றுமைக்காக ஒரு வேண்டுகோள் (பிலிப்பியர் 2:1-8)

அவனுடைய குடும்பத்தைவிட்டு வெளியேயுள்ள விசுவாசிகளின் பொது நலத்தின் மீதும் சிரத்தையுள்ளவர்களாக இருக்க வேண்டும். உள்ளூர் சபையிலுள்ள ஒற்றுமையை ஆதாரிக்கவும் இக்காரியம் வழி வகுக்கும்.

ஈ. நாம் "ஒருவருடைய பாரத்தை மற்றவர் சுமக்க வேண்டும்" (கலாத்தியர் 6:2). இவ்வாறு நாம் செய்தால், நாம் ஒற்றுமையை ஆதரிப்பது மட்டுமின்றி, கிறிஸ்துவின் இராஜரீக பிரமாணமான "உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" (யாக்கோபு 2:8), என்பதையும் நிறைவேற்றுகிறவர்களாக இருப்போம்.

4. விசுவாசிகள் அடிமையின் ஸ்தானத்தை எடுத்துக் கொண்டால் சபையில் ஒற்றுமை இருக்கும் (2:5-8).

அ. வசனம் 5-8. கிறிஸ்துவின் மனித அவதாரம் ஒரு கிறிஸ்தவ துதிப்பாடலாக அளிக்கப்பட்டு, பவுலால் கீழ்கண்ட காரியங்களை ஒரு பரிபூரண மாதிரியாக விளக்குவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது.

1. தாழ்மை.

2. சுய வெறுப்பு.

3. ஒரு சபைக்குத் தேவையாயிருக்கிற, மற்றவர் நலன் மீதுள்ள சிரத்தையானது, விசுவாசிகளின் மத்தியில் நிலைக்ககூடிய ஒற்றுமைக்காக இருக்கிறது.

ஆ. வசனம் 5. "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது". இதன் உண்மையான அர்த்தம் என்னவென்றால்: "கிறிஸ்துவானவர் மனித ரூபத்தை எடுத்த போது சிந்தித்த அதே எண்ணங்களையே உங்களுக்குள் நீங்கள் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்".

இ. வசனம் 6. "அவர் தேவனுடைய உருபமாயிருந்தார்". கிறிஸ்துவானவர் எப்பொழுதும் "தேவனுக்குள் நிலைத்திருக்கிறார், அதை விடவும், "தேவனுடைய உருபமாயிருக்கிறார்." யோவான், அவருடைய சுவிசேஷத்தில், இயேசுவை வார்த்தையாக (தெய்வீகத் தோற்றம்) குறிப்பிடும்பொழுது கூறுகிறார். "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவான் 1:1). இயேசுவானவர் இப்பொழுதும், எப்பொழுதும் தேவனுக்கு சமமானவராக இருக்கிறார். (யோவான் 5:18; 8:58; 10:30,33; 14:9). ஆனால் அவர்:

1. வசனம் 6 "தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்". முன்னே அவதாரமாயிருந்த கிறிஸ்துவானவர், எப்பொழுதும் தேவனுக்கு சமத்வமாக சொந்தங் கொண்டாடினவர், அதைப் பற்றிப் பிடித்துக் கொள்ள மனதில்லாதவராக இருந்தார் (யோவான்5:18; 8:58; 10:30,33; 14:9). ஒரு புகழில்லாத மனிதனாக, மிகத் தாழ்மையான நிலையில் அவர் வரவிரும்பினார்.

2. வசனம் 7. "தம்மைத் தாமே வெறுமையாக்கி". கிறிஸ்துவானவர் தன்னுடைய தெய்வத் தன்மையை "வெறுமையாக்கவில்லை" தான் நித்திய தேவனாக இருப்பதை நிறுத்தவில்லை. ஆயினும், அவர், தான் இருந்ததை விட மிகவும் தாழ்மையான நிலையில் தன் ஸ்தானத்தை அமைத்துக் கொண்டார் (2கொரிந்தியர் 8:9).

சபைகளின் ஒற்றுமைக்காக ஒரு வேண்டுகோள் (பிலிப்பியர் 2:1-8)

3. வசனம் 7. "அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார்." கிறிஸ்துவானவர் தன்னுடைய முன் அவதாரத்தன்மையுடன் வேறு ஒன்றையும் சேர்த்துக் கொண்டார். இந்த அவதாரமான தேவன் மனிதனின் தன்மையை எடுத்துக் கொண்டார். அவர் மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார் (யோவான் 1:14). இவர் இந்த மானிட ரூபத்தை எடுத்துக் கொண்டபொழுது இவர் பரிபூரண தேவனாகவும், பரிபூரண மனிதனாகவும் மாறினார்; தேவ-மனிதன். இதைத்தான் பவுல் அர்த்தம் கொள்கிறார். அவர் கூறும்பொழுது, "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோசெயர் 2:9). அவர் அவர்களை ஒரு உயர்ந்த மலையின்மேல் கூட்டிக்கொண்டு சென்று அவர்களுக்கு முன்பாக மறுரூபம் ஆனபோது, அவருடைய சில சீடர்கள் இந்தக் காரியத்தை உணர்ந்தார்கள் (மத்தேயு 17:2-3; 2பேதுரு 1:16-18; 2கொரிந்தியர் 5:21 பார்க்கவும்).

4. வசனம் 8. "அவர் தம்மைத் தாமே தாழ்த்தி மரண பரியந்தமும் கீழ்படிந்தவராகினார்". ஒருவன் தன்னைத் தானே தாழ்த்துவது என்பது அவமானத்திற்குரிய சூழ்நிலைகளில் வைக்கப்பட்டிருத்தல் என்பதாகும். அவர் தன்னை தீய மனிதர்களின் கைகளில் கஷ்டப்பட ஒப்புக் கொடுத்து, மனுக்குலத்தின் பாவங்களுக்காக, அவமானச் சிலுவையில் அவர் அறையப்பட்டதால், கிறிஸ்துவானவர் அவமானப்பட்டார். சிலுவையில் அறைவதின் மூலம் மரண மடைவது ரோம பிரஜைகளுக்கு அவமதிக்கப்படவில்லை.

தேவனால் சபிக்கப்பட்டவன் அந்த மனிதன் என்று யூதர்களுக்கு இது ஒரு குறிப்பாக இருந்தது (உபாகமம் 21:23; கலாத்தியர் 3:13; எபேசியர் 12:2).

ஈ. பவுல் நாம் காண விரும்புவது கிறிஸ்துவின் "தாழ்மையை"யும், மற்றவர்களின் நன்மைக்காக தன்னை அவமானமான சூழ்நிலைகளில் இருப்பதற்கு ஒப்புக் கொள்ளுதலையும்; மற்றவர்களுக்குச் சேவை செய்வதையுமாகும். கிறிஸ்துவானவர் நமக்காக இதைச் செய்ய விரும்பின் போது, நாமும் ஒருவர்க்கொருவர் இதைச் செய்ய விரும்ப வேண்டாமா? உள்ளூர் சபையினுள் ஒற்றுமை நிலைத்திருக்க வேண்டுமென்றால் இது கட்டாயமாக இருக்குமென்று பவுல் கூறுகிறார்.

முடிவுரை

அ. ஒற்றுமையானது சபையில் வெளிப்படுவது இவ்வாறு விசுவாசிகள் இருக்கும்போது:

1. ஏக சிந்தையுள்ளவர்களாக இருக்கும்போது.

2. தங்களை விட மற்றவர்களை மேன்மையாகக் கருதும்போது.

3. மற்றவர்களின் காரியங்களை அக்கறையாக நோக்கும் போது.

4. அடிமையின் ரூபமெடுக்கும் போது.

ஆ. கிறிஸ்துவைப் போல மென்மேலும் நம்மை மாற்ற பரிசுத்த ஆவியானவர் விடாமல் முயற்சி செய்கிறார். இந்த செய்முறை தொடர்ந்து கொண்டிருக்கும் போது நாம் மென்மேலும் உள்ளூர் சபைகளில் ஒற்றுமையைக் காணலாம்.

சபைகளின் ஒற்றுமைக்காக ஒரு வேண்டுகோள் (பிலிப்பியர் 2:1-8)

3. வசனம் 7. "அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார்." கிறிஸ்துவானவர் தன்னுடைய முன் அவதாரத்தன்மையுடன் வேறு ஒன்றையும் சேர்த்துக் கொண்டார். இந்த அவதாரமான தேவன் மனிதனின் தன்மையை எடுத்துக் கொண்டார். அவர் மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார் (யோவான் 1:14). இவர் இந்த மானிட ரூபத்தை எடுத்துக் கொண்டபொழுது இவர் பரிபூரண தேவனாகவும், பரிபூரண மனிதனாகவும் மாறினார்; தேவ-மனிதன். இதைத்தான் பவுல் அர்த்தம் கொள்கிறார். அவர் கூறும்பொழுது, "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோசெயர் 2:9). அவர் அவர்களை ஒரு உயர்ந்த மலையின்மேல் கூட்டிக்கொண்டு சென்று அவர்களுக்கு முன்பாக மறுரூபம் ஆனபோது, அவருடைய சில சீடர்கள் இந்தக் காரியத்தை உணர்ந்தார்கள் (மத்தேயு 17:2-3; 2பேதுரு 1:16-18; 2கொரிந்தியர் 5:21 பார்க்கவும்).

4. வசனம் 8. "அவர் தம்மைத் தாமே தாழ்த்தி மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகினார்". ஒருவன் தன்னைத் தானே தாழ்த்துவது என்பது அவமானத்திற்குரிய சூழ்நிலைகளில் வைக்கப்பட்டிருத்தல் என்பதாகும். அவர் தன்னை தீய மனிதர்களின் கைகளில் கஷ்டப்பட ஒப்புக் கொடுத்து, மனுக்குலத்தின் பாவங்களுக்காக, அவமானச் சிலுவையில் அவர் அறையப்பட்டதால், கிறிஸ்துவானவர் அவமானப்பட்டார். சிலுவையில் அறைவதின் மூலம் மரண மடைவது ரோம பிரஜைகளுக்கு அவமதிக்கப்படவில்லை.

தேவனால் சபிக்கப்பட்டவன் அந்த மனிதன் என்று யூதர்களுக்கு இது ஒரு குறிப்பாக இருந்தது (உபாகமம் 21:23; கலாத்தியர் 3:13; எபேசியர் 12:2).

ஈ. பவுல் நாம் காண விரும்புவது கிறிஸ்துவின் "தாழ்மையை"யும், மற்றவர்களின் நன்மைக்காக தன்னை அவமானமான சூழ்நிலைகளில் இருப்பதற்கு ஒப்புக் கொள்ளுதலையும்; மற்றவர்களுக்குச் சேவை செய்வதையுமாகும். கிறிஸ்துவானவர் நமக்காக இதைச் செய்ய விரும்பின் போது, நாமும் ஒருவர்க்கொருவர் இதைச் செய்ய விரும்ப வேண்டாமா? உள்ளூர் சபையினுள் ஒற்றுமை நிலைத்திருக்க வேண்டுமென்றால் இது கட்டாயமாக இருக்குமென்று பவுல் கூறுகிறார்.

முடிவுரை

அ. ஒற்றுமையானது சபையில் வெளிப்படுவது இவ்வாறு விசுவாசிகள் இருக்கும்போது:

1. ஏக சிந்தையுள்ளவர்களாக இருக்கும்போது.

2. தங்களை விட மற்றவர்களை மேன்மையாகக் கருதும்போது.

3. மற்றவர்களின் காரியங்களை அக்கரையாக நோக்கும் போது.

4. அடிமையின் ரூபமெடுக்கும் போது.

ஆ. கிறிஸ்துவைப் போல மென்மேலும் நம்மை மாற்ற பரிசுத்த ஆவியானவர் விடாமல் முயற்சி செய்கிறார். இந்த செய்முறை தொடர்ந்து கொண்டிருக்கும் போது நாம் மென்மேலும் உள்ளூர் சபைகளில் ஒற்றுமையைக் காணலாம். இக்காரியம், அடுத்த படியாக அவிசுவாசிகளை உள்ளூர் சபைகளுக்கு இரட்சிக்கப் படுவதற்காகக் கவர்ந்து கொள்ளும்.

நம் இரட்சிப்புக்காகப் பிரயாசம் செய்தல்
பிலிப்பியர் 2:12-16

முகவுரை

அ. பவுல் சிறையிலிருந்தார். பவுல் இல்லாமலேயே, பிலிப்பியர்கள் தங்களுடைய விசுவாசத்தில் முன்னேற வேண்டியதாயிருக்கிறது. ஆகையால்தங்கள் சொந்த சபைகளின் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள, அவர்களுடைய ஆரம்ப இரட்சிப்பின் அனுபவத்தைத்தாண்டி முன்னேறுபவர்களாக இருப்பது, பிலிப்பிய சபையின் விசுவாசிகளுக்கு மிகவும் நிச்சயமாக செய்ய வேண்டிய காரியமாக உள்ளது.

ஆ. ஆயினும், அவர்கள் தனியாக இருக்க மாட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு நடுவே இருந்து ஊக்கப்படுத்தி, வல்லமைப்படுத்தி இக்காரியங்களைக் கொண்டு வருவார்!

1. உங்கள் இரட்சிப்பு நிறைவேற பயத்தோடும், நடுக்கத்தோடும் பிரயாசப்படுங்கள் (2:12,13).

அ. வசனம் 12. "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே". "ஆதலால்" என்பது பவுல், பிலிப்பியர் பின்பற்ற விரும்புகின்ற கிறிஸ்துவின் மாதிரியைக் குறிப்பதாக உள்ளது *(2:5-8)*. மேலும், ஒரு உண்மையான போதகரின் தனிப்பட்ட அணுகுதலை பவுல் சேர்க்கிறார். "எனக்குப் பிரியமானவர்களே *(கிறிஸ்துவுக்குள்)*". பிலிப்பிய விசுவாசிகள் எப்போதுமே பவுலுக்கு விசேஷித்தவர்களாகவே இருந்தார்கள். அநேக நேரங்களில் அவருடைய தனிப்பட்ட தேவைகளுக்குப் பதிலளிக்குமாறு அவருக்கு பரிசுகள் அனுப்பினார்கள் *(4:18)*.

ஆ. வசனம் 12. "நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே". கடந்த காலத்தில், பிலிப்பிய சபையின் விசுவாசிகள் பவுல் கற்றுத் தந்தவைகளை வெகு உன்னிப்பாகக் கேட்டார்கள். அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டவைகளையே செய்தார்கள் *(அப்போஸ்தலர் நடபடிகள் 16)*. ஆயினும், பவுல் இப்பொழுது சிறைச்சாலையில் இருக்கிறார். ஆகையால் சபையானது அவர்களுடைய ஆவிக்குரிய முன்னேற்றத்தில் அவரில்லாமலேயே தொடர வேண்டும்.

இ. வசனம் 17. "உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்". "பிரயாசப்படுவது" என்பதின் உண்மையான அர்த்தம், "கவனம் செலுத்திப் பாடுதல்". "உங்கள்" என்பது பிலிப்பியில் உள்ள எல்லா விசுவாசிகளையும் குறிப்பதாகும். "இரட்சிப்பு" என்பது பிலிப்பிய சபையின் ஒன்றுபட்ட வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டதாக உள்ளது. அவர்களுடைய சச்சரவுகளையும், பிரச்சனைகளையும் அவர்கள் ஒன்றுபட்டு உழைத்துத் தீர்க்க வேண்டும், இவை என்னவென்றால்:

1. சுயநல ஆசைகளும், வீண்பெருமையும் *(2:3)*

2. யூத கிறிஸ்தவர்களான சுன்னத்துக்காரருடைய போதனைகள் *(3:2-3)*.

3. எயோதியாளுக்கும், சிந்திக்கேயாளுக்கும் உள்ள தர்க்கம் *(4:2)*. ஆயினும், அவர்களுக்கு கிறிஸ்துவின் மனோ நிலை இருந்தால்தான் இதற்குத் தீர்வு காணத் தகுதியாவார்கள் *(2:5-8)*.

ஈ. வசனம் 12. 'பயத்தோடும், நடுக்கத்தோடும்.' 'பயத்தோடும், நடுக்கத்தோடும்' இருத்தல் என்பது திடுக்கிட்டு திகிலினால் நடுங்குவதாகும். இந்த பயத்துக்கும், நடுக்கத்துக்கும் காரணம் இதுதான்:

நம் இரட்சிப்புக்காகப் பிரயாசம் செய்தல்
பிலிப்பியர் 2:12-16

"நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2கொரிந்தியர் 5:10). உள்ளூர் சபையிலுள்ள பிரச்சனைகளைத் தீர்க்க மற்ற விசுவாசிகளுடன் சேர்ந்து உழைக்காதவர்கள் கிறிஸ்துவிடம் கணக்குக் கொடுக்க வேண்டும்!

உ. வசனம் 13. "ஏனெனில், தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்". தேவனாகிய பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வாசம் செய்கிறார் என்பதை பிலிப்பிய விசுவாசிகள் புரிந்து கொள்ள வேண்டும் (1கொரிந்தியர் 14:25). தேவனாகிய பிதாவைப் பிரியப்படுத்துகிற காரியங்களைச் செய்து முடிக்க பரிசுத்த ஆவியானவர் முயற்சி செய்கிறார். இவர்களுக்கு இந்த விருப்பங்களைத் தருகிறார்.

1. கிறிஸ்துவை மாதிரியாகப் பின்பற்ற நேர்மையான, தாழ்மையுள்ள வாழ்க்கை வாழ வேண்டும்.

2. அன்பினாலும், நோக்கத்தினாலும் ஐக்கியப்பட வேண்டும்.

3. மேலும் அவர் இக்காரியங்களை நடப்பிக்க அவர்களுக்குத் தேவையான திவ்விய வல்லமையை அளிப்பார் (2பேதுரு 1:3; ரோமர் 8:3-4).

ஊ. உள்ளூர் சபைகள் ஆவிக்குரிய சுகத்துடன் இருக்க வேண்டுமென்றால், விசுவாசிகள் தாங்கள் ஒவ்வொருவருடன் வைத்திருக்கும் உறவுகளில், கிறிஸ்துவானவரின் மனேநிலையை வெளிக்காட்டவேண்டும். அப்படியில்லாவிட்டால், அவர்கள் நோயுள்ளவர்களாக, பூரணமில்லாதவர்களாக, உபயோக மற்றவர்களாகயிருப்பார்கள். இதனால் கிறிஸ்து மகிமைப்படமாட்டார். அவர்களை, அழிந்து போகிறவர்களைத் தேடவும், காப்பற்றவும் வழிகளாகப் பயன்படுத்தவும் மாட்டார்! இந்த ஐக்கியத்திலுள்ள அனேகரின் இரட்சிப்பும் அபாயகரமான நிலையில் இருக்கும்!

2. உங்கள் இரட்சிப்பிற்காக முறுமுறுக்காமல் தாக்கிக்காமல் பிரயாசப்படுங்கள் (2;16-18).

அ. வசனம் 16. "எல்லாவற்றையும் முறு முறுப்பில்லாமலும், தாக்கிப்பில்லாமலும் செய்யுங்கள்." முறு முறுத்தல்" என்பது மற்றவர்கள் மீது உங்களுடைய இருதயத்தில் உள்ள விரோதங்களையும், மனதில் காட்டும் தீவிர சம்மதமின்மையையும் காட்டுகிறதாகும். "தர்க்கிப்பது" என்பது ஒரு பிரச்சனையை பொது ஜனங்கள் மத்தியில் பலமாக விவாதிப்பதாகும்.

ஆ. ஒரு சமாதான வழியில் பிலிப்பிய சபையின் விசுவாசிகள், அவர்களுடைய சச்சரவுகளையும், பிரச்சனைகளையும் தீர்வு காணக் கவனம் செலுத்திப் பாடுபட வேண்டும்; இப்படி ஒரு முறை, எல்லாருக்கும் பயன்படுமாறு உள்ள முடிவுகள் உடையதாகும். வெளிப்படையான விவாதங்களும், கடுமையான பொது ஜன எதிர்ப்புகளும். (அவர்களுக்கு நடுவிலும், சட்டநீதிமன்றங்களிலும்மு) தவிர்க்கப்பட வேண்டியதாயிருக்கிறது.

இ. வசனம் 15. "குற்ற மற்றவர்களும், கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாயிருக்கும்படிக்கு "ஆகுதல்" என்பது இப்படிப்பட்டவர்கள் என்று உங்களை வெளிப்படுத்துதல்" என்று அர்த்தமாகும்.

நம் இரட்சிப்புக்காகப் பிரயாசம் செய்தல்
பிலிப்பியர் 2:12-16

விசுவாசிகள் அவர்களுடைய சச்சரவுகளையும் பிரச்சனைகளையும் சமாதானமான, ஞானமான வழியில் தீர்த்துக்கொண்டால், அவர்கள் தங்களை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள்.

1. வெளி மனிதர்கள் குறை கூறுவதற்கு அப்பால் ஒற்றுமையுடன் வாழ்கின்ற ஒரு வாழ்க்கை.

2. ஒழுக்கக் குறையில்லாமலும், கறையில்லாமலும்.

3. அசுத்தமுள்ள எண்ணங்கள் இல்லாமலும்.

4. பரிசுத்த ஆவியானவர் தங்களுடைய வாழ்க்கையை நடத்த அனுமதித்தலும், ஆவியானவரின் கனியை அவர்கள் மத்தியில் உண்டு பண்ணுதலும்.

ஈ. வசனம் 15. "கோணலும், மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே". அவர்கள் வாழும் உலகத்தின் வாழ்வு முறையை விட விசுவாசிகளின் வாழ்க்கையானது ஒருவருக்கொருவரிலுள்ள உறவுகள் - வேறுபட்டதாகப் பிரதிபலிக்க வேண்டும். கிறிஸ்துவிற்கு வெளியேயுள்ள இந்த உலகத்தின் மக்கள் எப்படியென்றால்:

1. கோணலானவர்கள்- அவர்கள் ஒழுக்கத்தில்குறையுள்ளவர்கள். அவர்கள் வளைந்து போன பலகையைப் போன்றவர்களும் அல்லது - வளைந்து போகிற சாலையைப் போன்றவர்களுமாகும்.

2. சீரழிந்தவர்கள்- அவர்களுடைய பார்வை கோணலானது. அவர்கள் ஒழுக்கக் கேடுள்ளவர்களாகவும், தேவனைவிட்டு விலகிப் படிப்படியாக அழிவுக்குச் செல்லும் பாதையில் போகிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

உ. வசனம் 14. "உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள்." கோணலும், மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாக நம்மை நாம் வெளிப்படுத்தும் பொழுது, அகன்ற இருட்டின் மூடு பனியிலே, நாம் பிரகாசமான ஒளிகளைப் போல் ஒளி வீசுவோம். கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷர்களுக்குச் சொன்ன காரியம் இதுவேதான். "நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.. மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" (மத்தேயு 5:14-16; எபேசியர் 5:8-யும் பார்க்கவும்)

ஊ. வசனம் 14ஆ. "ஜீவ வசனத்தை நீங்கள் பிடித்துக் கொண்டு". "ஜீவ வசனம்" சுவிசேஷ செய்தியாகும். ஒரு ஒலிம்பிக் போட்டியில் ஓடுபவரின் முன்னால் ஒரு தீப்பந்தம் நீட்டப்படுவதைப் போல, விசுவாசிகளும் சுவிசேஷத்தைத் தீப்பந்தம் போல் நீட்டிக் காட்ட வேண்டும். கடைசி காலத்தைப் பற்றி தீர்க்கதரிசியான தானியேல் இவ்வாறு கூறுகிறார். "ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அனேகரை நீதிக்குட்படுத்திகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள் (தானியேல் 12:3). பவுல் இந்த நிகழ்காலத்தில் சபையின் முக்கிய பொறுப்பை ஞான திருஷ்டியாகப் பார்க்காமல் இல்லை: அழிந்து கொண்டிருக்கிற உலகத்திற்கு சுவிசேஷத்தை அறிவித்தல், முக்கியம்.

நம் இரட்சிப்புக்காகப் பிரயாசம் செய்தல்
பிலிப்பியர் 2:12-16

எ. மேலும், ஒரு சபையின் அங்கத்தினர்கள் தங்களுடைய சொந்த சச்சரவுகளையும், பிரச்சனைகளையும், முறுமுறுப்பில்லாமலும், தர்க்கிப்பில்லாமலும் தீர்த்துக் கொள்ள கற்றுக் கொண்டால், சுவிசேஷ செய்தியானது அறிமுகப்படுத்தப்படும் பொழுது வல்லமையாகவும், பயன்தருவதாகவும் மாறும்!

3. உங்களை கிறிஸ்துவண்டை கொண்டு சென்றவர்கள் வீணாகப் பிரயாசப்படவில்லை என்பதற்காக உங்களுடைய இரட்சிப்புக்காகப் பிரயாசப்படுங்கள் (2:14இ)

அ. "மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில்". "மகிழ்ச்சி" என்பதற்கு அர்த்தம் பெருமைப்படுவதற்குரிய ஒரு காரியம். பிலிப்பிய விசுவாசிகள் இவ்வாறு செய்தால்:

1. "கவனம் செலுத்திப் பாடுபட்டு", தங்களுடைய சொந்தப் பிரச்சனைகளையும், சச்சரவுகளையும் தீர்த்துக் கொள்ளுதல்.

2. முறுமுறுப்பில்லாமலும், தர்க்கிப்பில்லாமலும் சேர்ந்து வாழக் கற்றுக் கொள்ளுதல்.

3. அவர்களுடைய ஜனங்கள் மத்தியில் நம்பிக்கையான, தைரியமான சாட்சியாக இருத்தல். அப்படியிருந்தால் கிறிஸ்துவானவர் அவருடைய சபையை எடுத்துக்கொள்ள வந்து, விசுவாசிகளுடைய கிரியைகளைச் சோதித்துப் பரிசளிக்கும் போது, கிறிஸ்துவானவருக்குப் பரிசளிக்க ஏதாவது ஒன்று பவுலுக்கு இருக்கும் (1தெசலோனிக்கேயர் 4:16-17; 2கொரிந்தியர் 5:10; ரோமர் 14:10-12; 1கொரிந்தியர் 3:12-15).

ஆ. தெசலோனிக்கேய விசுவாசிகளுக்குக் கடிதமூலம் தன் எண்ணத்தைத் தெரிவிக்கும்பொழுது இதைப்போன்ற வார்த்தைகளை பயன்படுத்துகிறார்: "எங்களுக்கு நம்பிக்கையும், சந்தோஷமும், மகிழ்ச்சியின் கிரீடமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள். நீங்களே எங்களுக்கு மகிமையும், சந்தோஷமுமாயிருக்கிறீர்கள் (1தெசலோனிக்கேயர் 2:19,20).

இ. "நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப் பட்டதுமில்லை". பவுல் அடிக்கடி இவ்வாறு உருவகப்படுத்துகிறார்.

1.ரோம சாம்ராஜ்ஜியத்திலுள்ள விளையாட்டு அரங்குகளிலுள்ள ஓட்டப் பந்தயக்காரர்கள் (1கொரிந்தியர் 9:24-26; கலாத்தியர் 2:2).

2. மனிதனின் உழைப்பு (பிலிப்பியர் 1:22; கொலோசெயர் 1:29; 1தீமோத்தேயு 4:10. சுவிசேஷத்திற்காக அவருடைய உழைப்பை வெளிப்படுத்த)

ஈ. பவுல் நம் அனைவரையும் போல, தாம் கிறிஸ்துவண்டை வழிப்படுத்தி சீஷராக்கினவர்களும், அவர் ஏற்படுத்தின சபைகளும் கடைசி கால மட்டும் நிற்க விரும்புகிறார். அவர் கிறிஸ்துவானவருக்கு முன்னால் தோன்றும்பொழுது, அவர் ஆர்வமுடன் திருப்தி தரும் வார்த்தைகளைக் கேட்க விரும்புகிறார். "நல்லது, உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அனேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத்தேயு 25:21,23).

நம் இரட்சிப்புக்காகப் பிரயாசம் செய்தல் பிலிப்பியர் 2:12-16

முடிவுரை

அ. விசுவாசிகள் வேலை செய்து தங்களுடைய சொந்தப் பிரச்சனைகளையும், சச்சரவுகளையும், தீர்க்கவும், முறு முறுப்பில்லாமலும், தர்க்கிப்பில்லாமலும் சேர்ந்து வாழக் கற்றுக் கொள்ளுதலுமான நேரம் ஒவ்வொரு சபையின் வாழ்க்கையிலும் வரும். அவர்கள் தாங்களே செய்யக் கூடிய காரியங்களை மற்றவர்கள் செய்வார்கள் என்று தொடர்ந்து நம்பிக்கை வைக்க முடியாது.

ஆ. ஒரு உள்ளூர் சபையிலுள்ள விசுவாசிகள் இந்த நிலைக்கு வளர்ச்சியடையும் பொழுது, உண்மையாகவே அவர்கள் இந்தப் பரந்த இருட்டான உலகத்தில் பிரகாசமான ஒளிகளாக மாறுவார்கள்.

மேலும் அவர்களுடைய நண்பர்கள், சொந்தக்காரர்கள், அண்டை வீட்டார்களுக்கு அளிக்கும் சுவிசேஷ செய்தியானது அதிக சந்தோஷத்துடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்கப்படும்.

இ. இதன் காரணமாக அவர்களை கிறிஸ்துவண்டை கொண்டு சென்று சீடர்களாக்கினவர்கள் வீணாகப் பிரயாசப்படாமல், கிறிஸ்துவானவருக்கு முன்னால் நிற்கும் பொழுது அவருக்கு பரிசு கொடுக்க ஏதாவது ஒன்று இருக்கும்.

மாம்சத்தின் மீதுள்ள நம்பிக்கை (பிலிப்பியர் 3:1:11)

முகவுரை

அ. "பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் தேவைகளை நிறைவேற்றுதலைத் தவிர்த்து கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பு மட்டுமே" என்றும் பவுலின் சுவிசேஷத்திற்கு இந்த வேதாகமப் பகுதி ஒரு திடமான வாதமாக உள்ளது. தேவனோடுள்ள ஒரு சரியான உறவு மனிதனுடைய ஞானத்தினாலும், முயற்சியானாலும் சாதிக்க முடியும் என்று உரிமை கொண்டாடும் விசுவாசிகளுக்கு இது ஒரு எச்சரிக்கையாகவும் இருக்கிறது. பவுல் நம்மிடம் கூறும்பொழுது இது பூரண தெளிவாகிறது.

1. மாம்சத்தின் மீது நம்பிக்கை வைக்கிறவர்களிடம் எச்சரிக்கையாயிருங்கள் *(3:1-2)*.

அ. வசனம் 1 "கடைசியாக, என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்" "கடைசியாக" என்பது அவருடைய கடிதத்தில் ஒரு புதிய காரியத்திற்கும், பகுதிக்கும் மாறுவதைக் குறிப்பதற்காக பவுலினால் இங்கு பயன் படுத்தப்பட்டுள்ளது. அவர் கடிதத்தை முடிக்கிறார் என்பதற்கு இது ஒரு குறிப்பல்ல *(4:8 பார்க்க)*.

ஆ. "கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்". "சந்தோஷப்படுங்கள்" என்பது மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருப்பதாகும். அவருடைய கடிதத்தில் இந்தப் பகுதி வரை பவுலினால் ஒரு சந்தோஷமான மனோ நிலை பராமரிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், அவர் இப்பொழுது தனக்கும், பிலிப்பிய விசுவாசி களுக்கும் விரும்பத்தகாத காரியங்களைப் பற்றிப் பேசப்போகிறார்.

இ. வசனம் 1. "எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல". பவுல் சுன்னத்துக்காரர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார் *(வசனம் 2)*. ஆயினும், முன்னர் எப்பொழுது பிலி ப்பியருக்கு சுன்னத்துக்காரர்களைப் பற்றி எழுதினார் என்பது தெரியவில்லை. இது பிலிப்பியர் 1:27,28-ம் வசனங்களைக் குறிப்பதாகவும், அல்லது நம்மிடம் இல்லாத பிலிப்பியருக்கு எழுதின கடிதமாகவும் இருக்கலாமென்று அனேகர் ஊகிக்கிறார்கள்.

ஈ. வசனம் 1. "அது உங்களுக்கு நலமாயிருக்கும்". என்பதற்கு இங்குள்ள அர்த்தம் ஒரு மனிதனைத் தடுக்கி விழவிடாமலும், தோல்வியடைய விடாமலும் பாதுகாப்பாக வைத்திருப்பதாகும். அவர்களுக்குப் பவுல் சொல்லப் போவதை பிலிப்பிய விசுவாசிகள் கேட்டால், அவர்கள் பத்திரமாக வைக்கப்பட்டு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்திலும், கொள்கைகளிலும் தடுக்கி விழாமல் இருப்பார்கள்!

உ. வசனம் 2. "நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள் சுன்னத்துக்காரருக் கு எச்சரிக்கையாயிருங்கள்". "எச்சரிக் கையாயிருங்கள்" என்பதற்கு "கவனம்-செலுத்துதல், விழிப் பாயிருத்தல், உங்களை வெகு கவனமாக இருக்கும்படி நான் உறுதியாக எச்சரிக்கிறேன்". இரட்சிப்பிற்கு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்துடன் விருத்த சேதனமும், பழைய ஏற்பாட்டு பிரமாணங்களின் சில தேவைகளைச் சந்திக்க வேண்டும் என்பதும், இந்த நாய்களினால், சந்தேகமில்லாமல் சுன்னத்துக் காரர்களினால் (கிறிஸ்துவத்திற்கு மத மாற்றப்பட்ட யூதர்கள்) இதனால் தான் பவுல் அவர்களை மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணுகிறவர்கள் (வெட்டுதல்) என்று கூறுகிறார். பவுல் இந்த எச்சரிப்பை கலாத்தியருக்கு எழுதிய கடிதத்தில் மறுபடியும் கூறியுள்ளார் *(கலாத்தியர் 5:2,4)*.

மாம்சத்தின் மீதுள்ள நம்பிக்கை (பிலிப்பியர் 3:1:11)

ஊ. சபையிலிருந்த சுன்னத்துக்காரர்கள் தொடர்ந்து அவருக்கும், அவருடைய புதிதாக மதமாற்றமடைந்த புற ஜாதியாருக்கும் பெருத்த துன்பங்களை விளைவித்தார்கள். இதனால்தான் அவர்களை "நாய்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். யூதர்களுக்கு, "நாயானது" மிகவும் வெறுக்கத்தக்க, அவமானமுள்ள, எல்லாப் பிராணிகளிலும் பரிதாபமானதுமான ஒரு அடையாளமாகும். அவர்கள் இந்த பதத்தை, அலட்சியமாகவும், சடங்காசாரமற்ற, சுத்தமற்ற புறஜாதிகளைக் குறிக்கவும் பயன்படுத்தினார்கள் (மத்தேயு 15:27). பவுல் அவர்களைக் குறிக்க இந்தப் பதத்தை பயன்படுத்துகிறார்!

எ. கலாத்தியருக்கு எழுதின அவருடைய கடிதத்தில் பவுல் கூறுகிறார், "உங்களைக் கலக்குகிறவர்கள் (சுன்னத்துக்காரர்கள்) தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும் (கலாத்தியர் 5:12). பவுல் தன்னுடைய "கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு" என்னும், சுவிசேஷத்தை வாதாட எருசலேம் ஆலோசனை சபையில் தோன்ற வேண்டுமென்று அதிகாரத்துடன் கேட்டவர்கள் சுன்னத்துக்காரர்கள் தான் (அப்போஸ்தலர் நடபடிகள் 15, முக்கியமாக 15:5,6)! நிச்சயமாக அவருடைய "கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு" என்னும் சுவிசேஷத்தை வாதாட இன்றைக்கு நம்முடைய பிரிவு அல்லது உள்ளூர் சபையிலோ அழைக்கப்படமாட்டார்!

2. நாங்கள் மாம்சத்தின் மேல் நம்பிக்கை வைக்கவில்லை (3:3).

அ. "நாமே விருத்த சேதமுள்ளவர்கள்". உண்மையான விருத்தசேதனம் என்பது ஒரு இருதயத்தின் காரியமாகும். இரட்சிப்பிற்காக அவர்களுடைய விசுவாசத்தை கிறிஸ்து மீது எல்லாருமே "உண்மையான விருத்தசேதமுள்ளவர்கள்:

1. பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய ஆவிகளை மறு பிறப்படையச் செய்துள்ளார்.

2. அவர்களுடைய இருதயம் சுத்தமாக்கப்பட்டுள்ளது.

3. அவர்கள் பாவமான சுபாவங்களையும், அதனுடைய தீய இச்சைகளையும் களைந்து விட்டிருக்கிறார்கள் (ரோமர் 2:29; கொலோசெயர் 2:11).

4. அவர்கள் புதிய சிருஷ்டிகள். பழையவைகள்ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (2கொரிந்தியர் 5:17).

ஆ. பவுல் உண்மையான விருத்தசேதனம் பண்ணினவர்களுடைய மூன்று குணாதிசயங்களைச் சுருக்கமாகக் கூறுகிறார்:

1. தேவனுடைய ஆவியானவர் மூலம் தொழுது கொள்ளுதல் - கிறிஸ்துவானவர் அவர்களுக்குள் வாழ அனுப்பிய பரிசுத்த ஆவியானவரால் விசுவாசிகள் கட்டுப்படுத்தப்பட்டு, வல்லமைப்படுத்தப் படுகிறார்கள். அவர்கள் தொழுதுகொண்டு, சேவை செய்து, அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஊக்குவிக்கப்பட்டு - அவர்களுக்குள் வாசம் செய்கிற பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலைப் பின்பற்றியதால் அதிகமாக கிறிஸ்துவைப் போலவே ஆகிறார்கள். (யோவான் 4:23,24; 14:16,17; கலாத்தியர் 16,25; ரோமர் 8;4-9; 2 கொரிந்தியர் 3:18).

2. கிறிஸ்துவுக்குள் மேன்மைப்படுதல் - விசுவாசிகள், தங்களுடைய நம்பிக்கை கிறிஸ்துமீது மட்டுமே காணப்படுகிறது என்று புரிந்துகொள்கிறார்கள்.

மாம்சத்தின் மீதுள்ள நம்பிக்கை (பிலிப்பியர் 3:1:11)

அவருடைய மீட்பின் பரிபூரண செயல் மட்டுமே அவர்களுடைய இரட்சிப்புக்கு ஆதாரமாக உள்ளது. அவருடைய நாமம் மட்டுமே மகிமைப்படுத்தப்பட்டு, அவர் எல்லா கனத்தையும் பெற்றுக் கொள்கிறார். (கலாத்தியர் 5:5,6; 6:14; 1 கொரிந்தியர் 1:31).

3. மாம்சத்தின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டாம் - "மாம்சம்" என்பது பலவீனமானதாகவும், ஆசைகள் உள்ளதாகவும் இருக்கின்ற சரீர மனித சுபாவத்தைக் குறிக்கிறது. விசுவாசிகள் இரட்சிப்பிற்காக தங்களுடைய மனித சுபாவத்திலோ அல்லது அந்த சுபாவத்தினால் பண்ணக்கூடிய காரியத்திலோ நம்பிக்கை வைப்பதில்லை. அவனுடைய சொந்த பலத்திலோ, ஞானத்திலோ, அவனுடைய அரசியல் அல்லது சமூக செல்வாக்கினாலோ அல்லது சடங்குகள் செய்வதினாலோ, மோசேயின் அல்லது ஏதாவது வேறு சட்டங்களைக் கைக்கொள்ளுவதினாலோ, மனிதன் தேவனுக்கு முன்பாக ஒரு தூய்மையான ஸ்திரப்படுத்துதலை அடைய வல்லமையற்றவன் என்று அவர்களுக்குத் தெரியும் (ரோமர் 3:27; 15-24; 5:6-8; கலாத்தியர் 2:16;3:3; எபேசியர் 2:8-9).

இ. நாம் நம்முடைய உலகத்திலுள்ள எல்லா இடங்களில் உள்ள பிராமணங்களில் கவனித்திருப்போம், என்னவென்றால், எல்லா பொய் மதமுறைகளும், கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுப்பதுமட்டுமின்றி, அவர்களுடைய கடவுளிடமும், தெய்வங்களிடமும் ஒரு சரியான உறவை ஏற்படுத்த சடங்குகள் செய்யப்பட வேண்டுமென்றும், பலிகளையும் அல்லது வேண்டுதல்களையும் செய்யவேண்டும் என்றதாயிருக்கிறது.

இந்த மத சம்பிரதாயங்களும், வழக்கங்களும் தேவனுக்கு முன்பாக ஒரு தூய ஸ்திரப்படுத்துதலை அடைய ஒன்றும் செய்வதில்லை. இவை பிசாசுகளின் கொள்கைகளாகும் (1கொரிந்தியர் 10:20; 1தீமோத்தேயு 4:1).

3. கிறிஸ்துவை அறிந்து கொள்ள வரும்பொழுது நாங்கள் மாம்சத்தின் மேலுள்ள எல்லா நம்பிகை களையும் விட்டு விட்டோம் (3:4-1).

அ. வசனம் 4-6. "வேறொருவர் மாம்சத்தின் மேல் நம்பிக்கை வைப்பதற்கு அவருக்குக் காரணங்கள் இருப்பதாக அவர் நினைத்தால் எனக்கு அதிகமுண்டு (காரணங்கள்) ஒரு மனிதனைதேவனோடு நல்ல இடத்தில் வைப்பதற்கு யூத மதத்திற்குள் ஒன்றும் இல்லையென்று பிலிப்பிய விசுவாசிகள் காணும்படி அப்போஸ்தலர் தன்னுடைய சொந்த வாழ்க்கையைப் பயன்படுத்துகிறார். மாம்சத்தின் மேல் முன்னாள் பவுல் நம்பிக்கைவைத்ததின் காரணங்கள் இவைகளாம்.

1. எட்டாவது நாளில் விருத்த சேதனம் பண்ணப்பட்டவர்-ஆபிரகாமிடம் தேவனுடைய ஒப்பந்தத்தின்படி ஒவ்வொரு யூத ஆண் குழந்தை அதனுடைய வாழ்க்கையின் எட்டாம் நாளில் விருத்த சேதனம் பண்ணப்பட்டது. (ஆதியாகமம் 17:12).

2. இஸ்ரவேல் வம்சத்தைச் சேர்ந்தவர்-பவுல் யூத மதத்திற்கு மாறின ஒரு புறஜாதியானைப்போலில்லாமல் ஒரு உண்மையான இஸ்ரவேலராகப் பிறந்தார்.

3. பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர் - யூதாவுடன் இந்தக் கோத்திரமானது, இஸ்ரவேலுக்கு அதன் முதல்ராஜாவையும் கொடுத்து, தாவீதின் சிம்மானத்திற்கு உண்மையுள்ளதாக இருந்தது (1இராஜாக்கள் 12:16-21).

மாம்சத்தின் மீதுள்ள நம்பிக்கை (பிலிப்பியர் 3:1:11)

4. எபிரேயரில் பிறந்த எபிரேயனாக-அவர் ஒரு தூய யூத வம்சத்தானாகவும், அவருடைய யூத மொழி, பழக்க வழக்கங்களை, வாழ்க்கை நடை முறைகளையும் பராமரித்தார்.

5. நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்-யூத மதத்தினில் மிகவும் கண்டிப்பான, சட்டத்தின்படி நடக்கின்ற பிரிவின் உறுப்பினராக அவர் இருந்தார்.

6. பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்பப் படுத்தினவன்-யூத மதத்தின் மீதும், சட்டத்தின் மீதுமுள்ள அவருடைய பக்தி வைராக்கியம், பவுலை எருசலேமிலும், பாலஸ்தீனாவிலுமுள்ள கிறிஸ்துவின் சபையைத் துன்புறுத்த, நடத்தியது.

7. நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன்-பவுல் மனத்தடுமாற்றமின்றி எல்லாச் சடங்குகளையும், சட்டங்களையும் பின்பற்றி, பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின்படி எல்லாப் பலிகளையும் செலுத்தினார்.

ஆ. வசனம் 7-9 "ஆகிலும், எனக்கு இலாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்". தமஸ்கு சாலையின் அனுபவத்திற்குப் பிறகு பவுல் அவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையை முழுவதுமாகத் திரும்பவும் மதிப்பிட்டார் (அப்போஸ்தலர் 9:6). அவர் இன்னொரு லாப நஷ்டக்கணக்கை முடித்துள்ளார். அவர் முன்னர் "லாபம்" என்ற பத்தியில் வைத்திருந்த யூத மதத்திலுள்ள அவருடைய சலுகைகளை எடுத்து "நஷ்டம்" என்ற பத்தியில் வைத்துள்ளார்.

இ. விலையுயர்ந்த சரக்கை ஏற்றிக் கொண்டு செல்லும் கப்பல் ஒரு கடும் புயலுக்குள்ளாகி மூழ்கும் அபாயத்தில் உள்ளது என்பது இன்னொரு நல்ல எடுத்துக்காட்டாகும். இந்த விலைமதிப்புள்ள சரக்கானது இப்போது உயிருக்கு இடைஞ்சலாகி கப்பலையும், கப்பலிலுள்ள அனைவருடைய உயிரையும் காப்பாற்ற, கப்பலை விட்டு வெளியே தூக்கிப் போடப்படவேண்டும் (அப்போஸ்தலர் 27:17,38).

ஈ. இவ்வாறு தான் பவுல் அவருடைய முன்னாலுள்ள யூதன் என்றும் "சலுகைகளை" கண்ணோக்குகிறார். கடந்த காலத்தில் ஏதாவது வேறு ஒன்றை மதிப்புள்ளவைகளாகக் கருதியவைகளையும், "குப்பை" என்று அவற்றை விளக்க இவ்வளவு தூரம் செல்கிறார். "குப்பை" (மனிதக் கழிவுப்பொருள், மதிப்பற்ற, கவர்ச்சியற்ற, விரும்பத்தகாத, எப்பொழுதும் வேண்டாம் என்று தூக்கிப்போடுபவைகள்). இந்தக் காரியங்களின் தேவ கணிப்பும் இது தான்:

1. மதப்பலிகளும், பழக்க வழக்கங்களும்,

2. அரசியல், சமூக மற்றும் பொருளாதார நிலை,

3. தேவனோடு ஒரு சரியான நிலைத்தலை ஆதாயப்படுத்திக்கொள்ள வழிகளான தனிப்பட்ட நல்ல காரியங்கள் (ஏசாயா64:6).

உ. இந்தக் கூற்றானது, "நான் நஷ்டம் என்று எண்ணினேன்" விளக்குவது என்னவென்றால், பவுல் ஒரு யூதனாக இருந்த, முன்னாலிருந்த அவருடைய சலுகைகளை நஷ்டம் என்று கருதிக் கொண்டிருக்கிறார். இதனில் ஒரு இடைவிடாத செயல் உட்படுத்தப்பட்டுள்ளது. பவுலின் எடுத்துக்காட்டை நாம் பின்பற்றுவது நமக்கு நலமாயிருக்கும்! நம்முடைய மாறுதலுக்கு முன்னால் வாழ்க்கையில் விலைமதிப்பற்றதாகக் கருதிய காரியங்கள் கிறிஸ்துவை அடையாமல் நம்மை வைத்திருந்தது என்று நாம் ஞாபகத்தில் வைத்திருப்போம். நம்முடைய மாற்றப்பட்ட "ஆவிக்குரிய லாப நஷ்டக்கணக்கில்" இவற்றை எல்லாம் "நஷ்டம் " என்ற பத்தியில் உட்படுத்திக் கொண்டோம்.

மாம்சத்தின் மீதுள்ள நம்பிக்கை (பிலிப்பியர் 3:1:11)

ஊ. வசனம் 9. நியாயப் பிரமாணத்தில் வருகிற சுய நீதியை உடையவனாயிராமல் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் (மட்டுமே)". இது தான் எப்பொழுதும் "பவுலின் சுவிசேஷம்" (ரோமர் 1:17; 3:21,22; 4:5,13;9:30-32; கலாத்தியர் 2:16; எபேசியர் 2:8,9). அனேகர் மாற்றவும், சேர்க்கவும் முயற்சி செய்த சுவிசேஷம். ஆனால் பவுல் அவர்களுடன் செய்யக் கூடிய காரியங்கள் ஒன்றுமில்லை. நாம் கூடத்தான்!.

எ. வசனம் 10-11. "இப்படி நான் அவரையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும்". "நஷ்டம்" பக்கத்தில் அவர் கொண்டு சென்றுள்ள காரியங்களைப் பதிலாக வைக்க பவுல் அவருடைய "மாற்றப்பட்ட, ஆவிக்குரிய, லாப நஷ்டக் கணக்கில்" "லாபப்பகுதியில் புதிய காரியங்களை இப்பொழுது சேர்த்துள்ளார்.

1. கிறிஸ்து அறிதல்-கிறிஸ்வுடன் ஒரு தனிப்பட்ட உறவை ஏற்படுத்துவதை இது குறிப்பதாகும். அவரை இன்னும் அதிகமாக இரட்சகராகவும், தேவனாகவும் முழுமையாக அறிவதாகும் (எபேசியர் 1:17,18; 1கொரிந்தியர் 2:12).

2. அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை விசுவாசியின் உள்ளத்தில் வாழ வருகின்ற பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்குள்ளாக அவனை ஒரு புதிய வாழ்க்கையை வாழ சக்தியளிக்கிறார் (எபேசியர் 1:19,20; ரோமர் 6:4; 2கொரிந்தியர் 3:18). பரிசுத்த ஆவியானவரினால் ஞானஸ்நானம் பண்ணப்படும்பொழுது ஒரு விசுவாசிக்கு சாட்சி பகரக் கிடைக்கும் மிக வல்லமையான தேவ பலத்தையும் இது குறிக்கின்றது (அப்போஸ்தலர் 1:4-8).

3. அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும்-பாவத்துக்கு மரிப்பது இது உட்படுத்தப்பட்டு (மாம்சத்தைச் சிலுவையில் அறைதல்) கிறிஸ்துவுக்காகவும், சுவிசேஷத்துக்காகவும், சரீரமாக மன உணர்விலும் பாடுபடுதலாகும் (2கொரிந்தியர் 4:10; ரோமர் 8:36; கொலோசெயர் 1:24).

4. அவருடைய மரணத்திற்கு ஒப்பான-மரணத்திற் குள்ளாகி- மற்றவர்களுடைய நலனுக்காக தன்னுடைய சுயத்திற்கு மரித்த கிறிஸ்துவோடு ஒத்திருத்தல் (கலாத்தியர் 2:20; மத்தேயு 20:28). கிறிஸ்துவினிமித்தம் இரத்த சாட்சியாக மரிப்பதையும் இது குறிக்கிறது.

5. எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோ டெழுந்திருப்பதற்கு தகுதியாகும்படிக்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நம்முடைய மாம்ச சரீரங்கள் உயிர்த்தெழுவதை வெளிப்படுத்தும் ஒரு தாழ்மையான எதிர்பார்ப்பாகும் (1கொரிந்தியர் 15:20-23; 1தெசலோனிக்கேயர் 4:16,17).

ஏ. பவுல் அவருடைய வம்ச பாரம்பரையையும், மத பாரம்பரியத்தையும் "நஷ்டம்" என்று மட்டும் எண்ணாமல் அவர் அவருடைய கலாச்சாரத்தையும், பழக்க வழக்கங்களையும் விட்டு விட்டு தன்னுடைய குடும்பம், நண்பர்கள், சொந்தக்காரர் களிடமிருந்து அவரைப் பிரித்துக் கொண்டார். இவைகளையெல்லாம் சேர்ந்ததை விட அவர் கிறிஸ்துவில் கண்டுகொண்டது அதிக முக்கியமானது என்று அவருக்குத் தெரியும்! அவர் கிறிஸ்துவை அறிந்து கொண்டவுடன் அவர் மாம்சத்தின் மீதுள்ள எல்லா நம்பிக்கையையும் விட்டு விட்டார்.

மாம்சத்தின் மீதுள்ள நம்பிக்கை (பிலிப்பியர் 3:1:11)

முடிவுரை

அ. சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் உள்ள பிலிப்பிய சபையிலுள்ள விசுவாசிகளுக்கு அப்போஸ்தலருடைய எச்சரிக்கைகள் உயிர்ப்பிப்பதாக இருந்தது போல், இன்றைய விசுவாசிகளுக்கும் இருக்கிறது.

1. மாம்சத்தின் மீது நம்பிக்கை வைப்பவர்களிடம் கவனமாக இருங்கள்.

2. மாம்சத்தின் மீது உங்களுடைய நம்பிக்கையை வைக்காதீர்கள்.

3. இயேசுவை தனிப்பட்டவராக, உங்களுக்குத் தெரிந்து கொள்ளும் போது நீங்கள் மாம்சத்தின் மீதுள்ள எல்லா நம்பிக்கையையும் விட்டு விட்டீர்கள்.

ஆ. இன்றைய உலக சபைகள் எங்கும் ஒரு சுய நம்பிக்கை என்னும் புதிய அலையையும், சுயமுயற்சியும், சுய சாதனையும் அசை வாடிக் கொண்டிருக்கின்றன. மேலும் அனேக விசுவாசிகள் இந்த தனிப்பட்ட சாதனைகளை கீழ் கண்டவைகளுடன் சம்பந்தப்படுத்துகின்றனர்:

1. தேவனோடு ஒரு சரியான உறவு.

2. கிறிஸ்துவின் வருகைக்கு முன்னர் ஒரு புதிய உலக ஒழுங்கின் பூரணமாக்குதல் நிறைவேற்றப்படவேண்டும்.

இ. விசுவாசிகள் திரும்பவும் மாம்சத்தின் மீது நம்பிக்கை வைக்கிறார்கள். ஆகையால் கலாத்தியருக்கு பவுலின் எச்சரிப்பு இன்றும் நிலைத்திருக்கிறது: "நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் (அல்லது கடவுளின் கிருபையை முதலாவது முறையிலேயே அனுபவிக்கவில்லை)" (கலாத்தியர் 5:4).

பரிசை வெல்லுதல்
(பிலிப்பியர் 3:12-21)

முகவுரை

அ. விசுவாசிகள் ஒரு பந்தயத்தில் ஓடுகிறார்கள். அவர்கள் ஒரு பரிசை வெல்வதற்கு ஓடுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை என்னும் ஓட்டத்தை முடித்து, தங்களுடைய பரலோக குடியிருப்பாகும் உரிமையை நிறைவேற்றி தங்களுடைய மகிமையான சரீரங்களைப் பெற விரும்புகிறார்கள்.

ஆ. இன்று நம்முடைய சுவிசேஷப் பகுதியில், நாம் பரிசை வெல்ல சில காரியங்கள் நாம் செய்யலாமென்று கூறுகிறார்.

1. நம்முடைய இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லுதல்.

2. அப்போஸ்தலர்கள் வாழ்வதற்கு வகுத்த முறைப்படி வாழ்தல்.

3. நம்முடைய சிந்தைகளை பரலோகக் குடியிருப்பில் வைத்தல்.

1. நாம் பரிசை வெல்ல நம்முடைய இலக்கை நோக்கித் தொடர வேண்டும் (3:12-15)

அ. வசனம் 12 "நான் அடைந்தாயிற்று; அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல்." "நான் அடைந்தாயிற்று" என்பது பவுல் வாக்கியம் 12:11ல் சொல்லியுள்ள காரியங்களைக் குறிப்பதாகும்.

1. கிறிஸ்துவை அறிதல்.

2. அவர் உயிர்த்தெழுதலின் வல்லமை.

3. அவருடைய பாடுகளின் பங்குகளில் ஐக்கியப்படுதல்.

4. அவருடைய மரணத்தில் அவரைப் போல் ஆகுதல்.

5. மரித்ததிலிலிருந்து உயிர்தெழுதலை அடைதல். "முற்றும் தேறினவனானேன்" என்பது அவருடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் செய்த பரிசுத்த வேலையைக் குறிக்கிறது.

ஆ. பவுல் கிறிஸ்துவை அறிந்து கொண்டார். கிறிஸ்துவின் பாடுகளோடு பங்கேற்று, கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமையை அவருடைய வாழ்க்கையிலும், ஊழியத்திலும் அனுபவித்தல். ஆனாலும் கிறிஸ்துவின் மரணத்தைப் போல் தன்னுடைய மரணமும் ஆகாமல் அல்லது மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலின் தகுதியையும் அவர் அடையவில்லை. மேலும், நாமெல்லாரும் அறிந்திருப்பது என்னவென்றால் ஆவிக்குரிய வளர்ச்சியும், பரிசுத்த ஆவியானவரின் பரிசுத்தப்படுத்தும் வேலையும்,ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் ஒரு இடை விடாத செயலாக இருக்கிறது (2பேதுரு 1:5-7; எபிரெயர் 12:10; 2கொரிந்தியர் 3:18). ஆகையால் பவுல் பரிசுத்தமாக்கப்படவில்லை.

இ. வசனம் 12. "கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய் தொடருகிறேன்." "தொடருகிறேன்" என்பதன் அர்த்தம் மிக ஆசையாகப் பற்றிக் கொள்ளல் அல்லது உரிமையாக்கிக் கொள்ளுதல் ஆகும். பவுல் உண்மையாகவே இதை அடையவிட்டாலும் தன் வாழ்க்கை பூராவும் தன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் பரிபூரணத்தை உரிமைப்படுத்தும் ஆசையை விடாமல் இருந்தார்.

பரிசை வெல்லுதல்
(பிலிப்பியர் 3:12-21)

அவர் இடைவிடாமல்" தொடருகிறேன்".

ஈ. "கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ" என்பது பவுலின் தமஸ்கு சாலை அனுபவத்தையும், கிறிஸ்துவின் சீடராகும் அழைப்பையும் குறிக்கிறது. (அப்போஸ்தலர் நடபடிகள் 9:6). ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு தமஸ்கு சாலை அனுபவம் இருந்திருக்கும். கிறிஸ்துவானவர் நம் ஒவ்வொருவரும் வளர்ச்சியடைய எதிர் பார்த்து அவரைப்போல் நற்குணமுள்ளவராக மாறுவது மட்டுமல்லாமல், மனிதர்கள் மத்தியில் நம்முடைய வாழ்க்கையையும், அந்த வழியிலேயே வாழ வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

உ. வசனம் 13. "அதைப் பிடித்துக் கொண்டேன் என்று எண்ணுகிறதில்லை". பவுல் தொடர்ந்து தனக்குத் தானே கூறுகிறார். "இன்னமும் இல்லை! என்னால் முடியும், நான் முடிப்பேன், நான் முடிக்க வேண்டும். ஆனால் இன்னமும் இல்லை!" நான் இடைவிடாமல் உரிமையைப்படுத்த விரும்பும் என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையிலுள்ள பூரணப்படுத்துதலை நான் இன்னமும் அடையவில்லை. பவுல் ஆவிக்குரிய வளர்ச்சியும், உயர்வுமுடைய ஒரு மனிதன் தான் கிறிஸ்துவோடுள்ள உறவில் வளர்ச்சியும் பரிபூரணம் அடைய "தொடருகிறேன்" என்று கூறுதல் குறிப்பிடத்தக்கதாகும்! நம்முடைய வாழ்க்கையில் நாம் காண விரும்பும் ஆவிக்குரிய வளர்ச்சியையும், நீதியின் பரிபூரணத்தையும் இன்னமும் பற்றிக் கொள்ளாத நம் அனைவருக்கும் இது ஒரு உற்சாகமூட்டும் வார்த்தையாக உள்ளது!

ஊ. வசனம் 13. "ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி". கிறிஸ்துவைப் போன்ற ஆவிக்குரிய வளர்ச்சியிலும், நீதியிலும் பரிபூரணத்திலும் "தொடர்தலும், நாடுதலுக்கும் (முன்னேறும் கடும் முயற்சி) உள்ள வழியானது என்னவென்றால்:

1. பின்னானவைகளை மறக்கவேண்டும்; நாம் யார், நம்மிடம் என்ன இருந்தது, நாம் என்ன செய்ய நினைத்தோமோ, ஆனால் இப்போது எப்படி இருக்கிறோமோ என்றும், இவற்றிற்கான எல்லா காரணங்களையும்!

2. நம்முடைய பழைய தோல்விகளை மறத்தல் (எபிரெயர் 12:1-2).

எ. வசனம் 14. "பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்". நாம் எல்லாரும் கிறிஸ்துவுடன் நம்முடைய நடையில் நீண்ட தூரஓட்டத்தான் ஓட்டப்பந்தயக்காரர்கள் போல இருக்கிறோம். நம் முடிவுக் கோட்டைத் தாண்டி பரிசை வெல்ல நாம் கடும் முயற்சி செய்து முன்னேறுகிறோம். (நம்முடைய சரீரங்கள் உயிர்த்தெழுதலும், ஒரு பரலோக பரதீசில் கிறிஸ்துவுடனும், பிதாவுடனும் நித்திய வாழ்வை அடைதல்) (கொலோசெயர் 3:1-2; 2தீமோத்தேயு 4:8; யாக்கோபு 1:12; வெளிப்படுத்தின விசேஷம் 2:10)!

ஏ. வசனம் 15. "ஆகையால் நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்த சிந்தையாயிருக்கக் கடவோம்". நம் மத்தியில் ஆவிக்குரிய வளர்ச்சியடைந்தவர் இக்காரியங்களை மறக்கும் பழக்கம் உடையவர்களாக இருப்பார்கள் என்று பவுல் கூறுகிறார்:

1. அவர்களுடைய கடந்த கால வாழ்க்கையையும், அதனுடைய உலக முக்கியத்துவத்தையும்.

2. அவர்களுடைய கடந்த கால தோல்விகள் இரட்சிப்பின் அனுபவத்தின் முன்னும், பின்னும்.

பரிசை வெல்லுதல்
(பிலிப்பியர் 3:12-21)

3. கிறிஸ்துவைப் போல பரிபூரணமாக நற்குணத்திலும், வாழ்க்கை முறையிலும் உள்ள அவர்களுடைய இலக்கைப் பிடித்துக் கொள்ளுதல்.

4. இது ஒரு இடைவிடாத செயல் என்பதை அவர்கள் புரிந்து அதை அடைய எப்பொழுதும் கடும் முயற்சி செய்கிறார்கள்.

1. வசனம் 15. "எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறு சிந்தையாயிருந்தால்". சந்தேகமில்லாமல் பிலிப்பிய சபையில் உள்ள சிலர் ஏற்கெனவே தங்களைப் பரிபூரணராக எண்ணி அதன்படி கிறிஸ்துவுக்குள்ளான தங்களுடைய சகோதர, சகோதரிகள் முன்னால் வெளிப்படையாக நடித்தார்கள்.

பொதுவாக இவ்வாறு இரண்டு அல்லது மூன்று பேர் ஒவ்வொரு சபையிலும் இருப்பார்கள். கிறிஸ்துவைப்போல் நற்குணத்திலும், வாழ்க்கை முறையிலும் மாறுவதை விட்டு விட்ட சிலரும் இருந்தனர். அவர்கள் திரும்பவும் கிறிஸ்துவைப் போல் ஆவதற்கு கடும் முயற்சி செய்தால், அவர்கள் கிறிஸ்துவை முதலில் சந்தித்து சீடரான போது பரிசுத்த ஆவியானவர் அவர்கள் பரிசுத்தப்படுத்துதலை அவர்களுடைய வாழ்க்கையில் தொடங்கினதை பரிசுத்த ஆவியானவர் விடாமல் செய்வார்.

2. நாம் பரிசை வெல்ல வேண்டுமென்றால் அப்போஸ்தலர்கள் வாழ்வதற்கு வகுத்த முறைப்படி வாழவேண்டும் (3:16-19).

அ. வசனம் 16. "ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அது முதல் ஒரே ஒழுங்காக நடந்து கொண்டு, ஒரே சிந்தையாய் இருப்போமாக."

"அது முதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு" என்பதன் அர்த்தம் "வழிதவறாது, கவனமாகப் பின்பற்றுதலாகும்." "எது தவறாது, கவனமாகப் பின்பற்றுதலாகும்." "எது வரையில் தேறியிருக்கிறோமோ என்பது "இந்த நிலை வரை பெற்றுக் கொண்ட தேவ சத்தியத்தின் புரிந்து கொள்ளுதலைக் குறிக்கிறது". அவர்கள் ஏற்கெனவே அறிந்து கொண்ட கிறிஸ்துவிற்கும், சுவிசேஷத்தின் சத்தியத்திற்கும் தக்கவாறு வாழ விசுவாசிகள் உற்சாகப்படுத்தப்படுகின்றனர். அவர்கள் ஏற்கெனவே "கேட்ட (மேலும் பவுலின் வாழ்க்கையில் பார்த்த) சத்தியத்தைச் செய்கிறவர்களாக இருக்க வேண்டும்" (மத்தேயு 7:24; யாக்கோபு 1:22).

ஆ. வசனம் 17. "நீங்கள் என்னோடே கூட பின்பற்றுகிறவர்களாகி." ஆரம்ப கால சபையில் விசுவாசிகளுக்கு செயல்படத்தக்கூடிய கிறிஸ்தவ வாழ்வின் மாதிரிகள் தேவைப்பட்டது. அனேக புறஜாதி விசுவாசிகள் தங்கள் அஞ்ஞான நிலையிலிருந்து வந்து விட்டார்கள். ஆகையால் பவுல், தான் எவ்வாறு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறாரோ அதைப் போலவே பிலிப்பிய விசுவாசிகளையும், தன்னுடைய நடத்தையைப் பின்பற்றக் கூறுகிறார். பவுல் கொரிந்திய விசுவாசிகளிடமும், இக்காரியத்தை செய்துள்ளார் (1கொரிந்தியர் 11:1).

இ. வசனம் 17. "நாங்கள் உங்களுக்கு வழி காட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்". பிலிப்பிய விசுவாசிகள் பின்பற்றக்கூடிய தீமோத்தேயு ஒருவேளை எப்பாப்பிராதேத்து உள்ளிட்ட வேறு சிலரும் இருந்தனர். இன்றைய சபைகளிலும் உள்ள நிலைமை இதுதான். நாம் பின்பற்ற நல்லதாயிருக்கக்கூடிய ஆவிக்குரிய வளர்ச்சியடைந்த சில மனிதர்கள் நமக்கு மத்தியில் இருக்கிறார்கள். பவுல் பேசுகின்ற "மாதிரி" என்பதைப் பற்றி 3:7-16ல் சுருக்கமாக விளக்கியுள்ளார்.

பரிசை வெல்லுதல்
(பிலிப்பியர் 3:12-21)

1. அவர்களுக்கு லாபமானதை இப்பொழுது நஷ்டமாகக் கருதுகிறார்கள்.

2. அவர்கள் எல்லாக் காரியங்களையும், நஷ்டமாகக் கருதுகிறார்கள்.

3. கிறிஸ்துவினிமித்தம் அவர்கள் எல்லாவற்றையும் இழந்து அவற்றைக் குப்பை என்று கருதுகிறார்கள்.

4. கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் மட்டுமே வரும் ஒரு நல்லொழுக்கத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

5. இந்த வாழ்க்கையில் முழுவதுமாக அடையாவிட்டாலும், கிறிஸ்துவைப் போலுள்ள பரிபூரணத்தை இடைவிடாது தொடருகிறார்கள்.

6. கடந்த காலத்தைப் பற்றி மறத்தல்; அவர்கள் என்னவாக இருந்தார்கள், அவர்களுக்கு என்ன இருந்தது, அவர்கள் யாராக இருந்தார்கள், அவர்கள் என்ன சாதித்தார்கள், சீடர்களோடு முன்னும், பின்னும் உள்ள அவர்களுடைய தோல்விகள்.

ஈ. வசனம் 18-19. "அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞர் என்று உங்களுக்கு அனேகம் தரம் சொன்னேன்". "ஒரு பகைவராக" இருத்தல் என்பது, - வெறுத்து இன்னொரு மனிதரிடம் விரோதத் தன்மையைக் காண்பிப்பது. "சிலுவை" இயேசுவின் சுவிசேஷமாகும். ஆரம்ப கால ஊழிய சபைகளில் அனேகர் கிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும் உண்மையாகவே பகைவர்களாக இருந்தனர்.

அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று உரிமை கொண்டாடினாலும், கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்க்கையை வாழவில்லை. பவுல் அவருடைய ஊழிய சபைகளைச் சந்திக்கும்போது விடாமல், விசுவாசிகளை, இதுபோன்ற வஞ்சகர்களைப் பற்றி எச்சரித்தார்.

உ. பவுல் சிலுவையின் எதிரிகளை இவ்வாறு சொல்லி விளக்குகிறார், "அவர்களுடைய:

1. "முடிவு அழிவு" - தேவனிடத்திலிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட்டு, நரகத்தில் முழு நித்தியமாக இருத்தல்.

2. "தேவன் வயிறே" -கட்டுக் கடங்காத, மாம்சீக, புலன்களின் ஆவல்.

3. மகிமை அவர்களுடைய இலட்சையே" - ஒழுக்கமற்ற, தேவனற்ற நடத்தையை வெளிக்காட்டுதல்.

4. பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்."மாம்சமான, உலக பிரகாரமான, புலன்களின் ஆவலைத் தொடர்தல்.

ஊ. சிலுவைக்கு எதிரிகளாக இந்த நாட்டிலுள்ள மக்களைப்பற்றிப் போதகர்களும், வேறு சபைத்தலைவர்களும், தேவனுடைய மக்களுக்கு எச்சரிப்பது நலமாயிருக்கும். இத்தகைய மனிதர்கள் ஒவ்வொரு தலைமுறையிலுள்ள சபைகளுக்கும் ஒரு அபாயமாக இருக்கிறார்கள் (ரோமர் 16:17,18; வெளிப்படுத்தின விசேஷம் 2:6, 20-21).

விசுவாசிகள் என்ன செய்ய வேண்டுமென்றால்:

1. இந்த வஞ்சகர்களைத் தவிர்க்க வேண்டும்.

2. அவர்கள் பெற்றுள்ள தேவனுடைய வார்த்தையின், உண்மையின் மாதிரியைப் பின்பற்றுதல்.

பரிசை வெல்லுதல்
(பிலிப்பியர் 3:12-21)

3. அதற்குத் தக்கவாறு வாழும் மக்களின் வாழ்வின் மாதிரியைப் பின்பற்றுதல்.

3. நாம் பரிசை வெல்ல வேண்டுமென்றால் நம்முடைய சிந்தையானது, நம்முடைய பரலோகக் குடியிருப்பின் மீது இடைவிடாமல் இருக்க வேண்டும் (3:20,21).

அ. வசனம் 20. "நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது. "குடியிருப்பு" இருப்பது என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் வாழ்ந்து உங்களுடைய பெயரை அந்த சமுதாயத்தின் பதிவேட்டில் எழுதுதல். அதனால் நாம் உலகத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட பட்டணத்திலோ, நாட்டிலோ வாழ்ந்தாலும், பரலோகமே நம்முடைய உண்மையான பதிவு பண்ணும் இடமாக இருக்கிறது. நம்முடைய பெயர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 21:27). தங்களுடைய மனதை உலக காரியங்களில் வைத்தும், தங்களுடைய பெயர்களை உலகப் பதிவேட்டில் எழுதப்பட்டிருக்கும்படியும் செய்யும் "சிலுவையின் எதிரிகளிடமிருந்து" இது நம்மை வேறுபடுத்திக் காட்டுகிறது.

ஆ. நாம் வேற்று நாட்டில் வாழ்கின்ற அன்னியரும், பரதேசிகளுமாய் இருக்கிறோம். நாம் இந்த உலகத்தில் வாழ்கிறோம், அதனில் ஈடுபடுகிறோம், ஆனால் நம்முடைய சிந்தையானது இடைவிடாமல் நம்முடைய பரலோக குடியிருப்பில் இருக்கிறது (எபிரெயர் 11:10; 13-16; கலாத்தியர் 4:26; 1பேதுரு 1:1; 2:11; யோவான் 17:14, 16-ஐயும் பார்க்கவும்).

இ. வசனம் 20. "நாம் ஆவலுடன் அங்கேயிருந்து ஒரு இரட்சகரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்." கிறிஸ்து இயேசு நம்முடைய இரட்சகர் (விடுவிக்கிறவர்). அவர் நம்மை இதனிலிருந்து காப்பாற்றியுள்ளார்:

1. முழு உலகத்தின் மீது வரப்போகின்ற தேவகோபாக்கினை.

2. சாத்தானின் ஆட்சியும், இராஜ்ஜியமும்.

3. ஆதாமிடமிருந்து நாம் சுதந்தரித்துக் கொண்ட பாவ சுபாவத்தின் வல்லமை.

ஈ. அவருடைய மரணத்திற்குப் பின் உயிர்த்தெழுந்து, பரலோகம் சென்றார். (அப்போஸ்தலர் நடபடிகள் 1:9-11). ஆனால் போவதற்கு முன் அவர் கூறினார், "என் பிதாவின் வீட்டில் அனேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படி இல்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும்வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்" (யோவான் 14:2,3; 1தெசலோனிக்கேயர் 4:16,17 பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர் பவுலின் மூலமாகக் கூறுவதையும் பார்க்கவும்). ஆகையால், நாம் நம்முடைய பரலோகப் பரதீசுக்கு, அவர் நமக்காகத் திரும்பி வந்து நம்மைக் கூட்டிக் கொண்டு செல்ல, ஆவலோடு காத்திருக்கிறோம் (1கொரிந்தியர் 1:7; 1தெசலோனிக்கேயர்1:9,10; 2தீமோத்தேயு 4:8; தீத்து 2:13; யாக்கோபு 4:7,8).

உ. வசனம் 21. "அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையின் செயல்படியே." "வல்லமை" என்பது இங்கே தெய்வீக, எல்லாவற்றையும் சூழ்ந்து கொள்கின்ற தேவ வல்லமையைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் தெய்வீக வல்லமை உலகம் பூராவும் பூரணமானது

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

பரிசை வெல்லுதல்
(பிலிப்பியர் 3:12-21)

(மத்தேயு 28:18; எபேசியர் 1:19ஆ-21). எல்லாவற்றையும் அவருடைய அதிகாரத்திற்குள் கொண்டு வர சக்தி அளிக்கும் வல்லமை இதுதான் (1கொரிந்தியர் 15:27;- எபேசியர் 1:22; பிலிப்பியர் 2:9-11). அவருக்கு இந்த வல்லமை இருக்கிறது என்பது நமக்குத் தெரிந்திருப்பதால் நம்முடைய அற்பமான சரீரங்களை மறுரூபமாக மாற்ற வல்லவர் என்று நிச்சயமாயிருக்கிறோம்!

ஊ. வசனம் 21. "நம்முடைய அற்பமான சரீரங்களை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்." "நமது அற்பமான சரீரங்கள்" என்பது அழிவையும், மரணத்தையும், பலவீனம், நோய், பாவ இச்சைகள் முதலானவைகளால் எளிதில் பாதிக்கப்படும், பலவீனமான, அழிந்து போகக்கூடிய மனித சரீரங்களைக் குறிக்கப்படுகிறது. தற்சமயம் உலகத்தில் "கிறிஸ்துவின் வல்லமை" பரிசுத்த ஆவியானவர் என்பவரால் வெளிப்படுத்தப்படுகிறது. ஆகையால், அவர்தான் "நம்முடைய அற்பமான சரீரங்களை (ரோமர் 8:11; 1கொரிந்தியர் 6:14; 15:50-53) மறுரூபமாக்கி" (நம்முடைய வெளித் தோற்றத்தைப் பூரணமாக மாற்றி) உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மகிமையான சரீரத்தைப்போல் மாற்றக்கூடிய ஒருவர் (ரோமர் 8:29; 1யோவான் 3:2)

முடிவுரை

அ. நாம் ஒரு ஆவிக்குரிய ஓட்டத்தை ஓடி,கடும் முயற்சி செய்து முடிவுக்கோட்டைத் தாண்ட முன்னேறுகிறோம். நாம் இவ்வாறிருந்தால் கிறிஸ்துவானவர் அவருடைய சபைக்காக திரும்பும் பொழுது மகிமையான சரீரத்தையும், நித்திய வாழ்வு என்னும் பரிசையும் வெல்லுவோம்:

1. நம்முடைய இலக்கை நோக்கி இடைவிடாமல் முன்னேறுதல்.

2. அப்போஸ்தலர் வாழ்வதற்கு வகுத்த முறைப்படி வாழ்தல்.

3. நம்முடைய சிந்தைகளை பரலோகக் குடியிருப்பில் வைத்தல்.

ஆ. நாம் வாழும் இந்த உலகமானது அதிகமான உலக சிந்தைபோடிருப்பதால், நம்முடைய சிந்தையும், காரியங்களும், நம்முடைய பரலோகக் குடியிருப்பின் மீது இன்னமும் நிச்சயமாக வைக்கப்பட்டிருக்கிறதா என்று நம்முடைய வாழ்வை அவ்வப்போது சோதிப்பது நமக்கு நலமாயிருக்கும்!

இந்தக் கடைசி நாட்களின் விசுவாசிகளின் நடத்தை (பிலிப்பியர் 4:4-9)

முகவுரை

அ. பிலிப்பிரியில் நடந்த சுவிசேஷ வேலையில் எபோதியாளும், சிந்திக்கேயாளும் பவுலின் இரு நண்பர்களாக இருந்தனர். ஆயினும் பவுல் இந்தக் கடிதத்தை எழுதும் நேரத்தில் அவர்களுக்கு நடுவே தீவிர கருத்து வேற்றுமை இருந்தது. ஆகையால் பவுல் 4-ம் அதிகாரத்தின் தொடக்கத்தில் அவர்கள் ஒருவித ஒற்றுமையை அடைய அவர்களிடம் வேண்டிக் கொண்டார்.

ஆ. அவர் பின்னர் இந்த சபையின் காலத்தின் கடினமான, கடைசி நாட்களில் விசுவாசிகள் எந்த வழியில் நடந்து கொள்ள வேண்டும் என்பதைச் சுருக்கமாக விளக்குகிறார்.

1. எந்த சூழ்நிலையிலும், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக இருங்கள்.

2. எந்தக் காரியத்தைப் பற்றியும் கவலைப்படவேண்டாம்.

3. உங்களுடைய தேவைகளை தேவனுக்கு ஸ்தோத்திரத்தோடே தெரிவியுங்கள்.

4. உயர்ந்த உன்னத காரியங்களைப் பற்றி சிந்தியுங்கள்.

1. இந்தக் கடைசி நாட்களின் காலத்தில் விசுவாசிகள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் (4:4-6அ).

அ. வசனம் 4 "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்... மறுபடியும் சந்தோஷமாயிருங்கள்!" பவுல் உண்மையாக என்ன கூறுகிறார் என்றால், "நான் ஒரு தடவை கூறியுள்ளேன், ஆனால் திரும்பவும் முக்கியத்துவத்திற்காக கூறுகிறேன்". "சந்தோஷமாயிருங்கள்" இங்கே உண்மையாக தேவனுடைய சீடர்களுக்கு ஒரு கட்டளையாக உள்ளது. "எப்பொழுதும்" என்னும் வார்த்தை உணர்த்துவது போல் எந்த சூழ்நிலையிலும் அவர்கள் மகிழ்ச்சியுடன், அமைதியான சந்தோஷத்துடன், களிப்புடன், ஆவிக்குரிய நலனுடன் இருப்பதை அவர் எதிர்பார்க்கிறார்.

ஆ. வசனம் 4. "கர்த்தருக்குள்" கர்த்தருக்குள் உள்ள விசுவாசம் தான் நம்மை கடினமான சூழ்நிலைகளின் மத்தியில் சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்திருக்கிறது கிறிஸ்துவின் மீது விசுவாசத்தை வைத்து அவர் கைகளில் எல்லாக் காரியங்களையும் வைத்து விடுங்கள். (ஆபகூக் 3:17,18; யாக்கோபு 1:2; 1பேதுரு4:13).

இ. வசனம் 5. "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக". "சாந்தகுணமாக" இருந்தல் என்பது அடக்கமாகவும், பொறுமையாகவும், மற்றவர்களிடம் நிதானமாகவும் நடத்தல், இனிமையாகவும், நியாயமாகவும் இருப்பதாகும். இந்தக் குணத்தை சில மனிதரிடம் வெளிப்படுத்துவது சுலபமாகும், ஆனால் பவுல், இது "எல்லா மனிதரிடமும்" காட்டப்பட வேண்டும் என்று கட்டளையிடுகிறார். மேலும், சில நேரங்களில் நம்முடைய "உரிமைகளை"விட்டு விடவும் தேவைப்படுகின்றது.

ஈ. வசனம் 5. "கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" கர்த்தர் தன்னுடைய சபைக்காக வரப்போவதை இது குறிக்கிறது (1தெசலோனிக்கேயர் 4:13-17). இந்தக் காரணத்தினால் நாம் இவ்வாறிருக்கலாம்.

இந்தக் கடைசி நாட்களின் விசுவாசிகளின் நடத்தை (பிலிப்பியர் 4:4-9)

1. எந்த சூழ்நிலையிலும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

2. நம்முடைய தனிப்பட்ட உரிமைகளை விட்டுவிட்டு, எல்லா மனிதர்களிடமும் உள்ள நம்முடைய உறவுகளில் சாந்தமாக இருக்க வேண்டும். யாக்கோபு, சிதறடிக்கப்பட்ட யூதர்களுக்கு எழுதின அவருடைய கடிதத்தில், நம்முடைய நடத்தைக்கும், தேவனுடைய வருகைக்கும் இந்த அதே இணைப்பைக் குறிப்பிடுகிறார் (யாக்கோபு 5:8).

உ. வசனம் 6அ "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல்", "கவலை" படுவது என்பது ஒரு கவனத்தைத் திருப்பும் கவலையுடன் இருப்பது என்று அர்த்தமாகும்; இந்தத் தற்கால வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட "ஏதாவது ஒன்றைப்" பற்றி அதிகமாகக் கவலைப்பட்டு கிறிஸ்துவின் மீதுள்ள நம்முடைய விசுவாசத்திலிருந்து கவனம் திருப்பப்படுதலாகும். கிறிஸ்துவானவர், இந்தப் பிரச்சனையைப்பற்றி மலைப்பிரசங்கத்தில் பேசுகிறார் (மத்தேயு 6:25-34).

ஊ. தேவனுடைய வருகையானது சமீபம் என்று அறிதல் இவ்வாறு இருக்க வேண்டும்.

1. சோதனை நேரங்களிலும், நெருக்கத்திலும் நம்முடைய மன நிலைமை.

2. மற்றவர்களுடன் உள்ள நம்முடைய உறவுகளில் நாம் வெளிப்படுத்தும் நடத்தையின் மாதிரியை

3. காரியங்களைப்பற்றி நாம் கவலைப்படுதலை. இவ்வாறு இது செய்யாவிட்டால், நாம் ஆவிக்குள்ளாக பலவீனமாக, நம்முடைய கிறிஸ்தவ நடையில் ஒரு முக்கியமான காரணத்தை இழக்கிறோம். எந்த சூழ்நிலையிலும் கிறிஸ்துவின் மீது இடைவிடாத விசுவாசமும் நம்பிக்கையும், நாம் இதை பாவம் என்று அறிக்கையிட்டால், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் மீதுள்ள நம்முடைய விசுவாசத்தையும், நம்பிக்கையையும் திரும்பவும் கொடுப்பார். இந்தக் கடைசி நாட்களில் அவர் நம்மைக் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்க விரும்புகிறார்!.

2. விசுவாசிகள் தங்களுடைய விண்ணப்பங்களைத் தேவனுக்கு ஸ்தோத்திரத்தோடே இந்தக் கடைசி நாட்களில் தெரியப்படுத்தவேண்டும் (4:6-7).

அ. வசனம்6. "எல்லாவற்றையுங் குறித்து ஸ்தோத்தி ரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும்" கவலைக்கு (அதிகமாக இந்த வாழ்க்கையின் சூழ் நிலைகளையும், காரியங்களையும் பற்றிக் கவலைப்படுதல்). பரிகாரம் ஜெபமும், நம்முடைய வழியை தேவனிடம் அர்ப்பணிப்பதாகும். "ஜெபம்" என்பது நம்முடைய தேவலோக பிதாவை அணுகும்போதுள்ள வழிபடும் சிந்தையோடு சம்பந்தப்பட்டதாகும். "விண்ணப்பம்" என்பது தேவனோடு குறிப்பிட்ட தேவைகளுக்காகப் பேசுவதாகும். பேதுரு நம்மிடம் கூறுகிறார். அவர் உங்களை விசாரிக்கிறவர் ஆனபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்" (1பேதுரு 5:7).

ஆ. மேலும் நம்முடைய பரலோக பிதாவிடம் நம்முடைய குறிப்பிட்ட தேவைகளுக்காக பிதாவின் முன் நம்மை நாம் தாழ்த்தும்பொழுது, நாம் "நம்முடைய இருதயத்தில் ஸ்தோத்திரத்தோடே" செய்ய வேண்டும். கடந்த காலத்தில் நம்மிடம் தேவன் காட்டிய நன்மையையும், இரக்கத்தையும் நாம் நினைவு கூர்ந்தால் இந்த விசுவாசத்தை வெளிப்படுத்துவோம்.

இந்தக் கடைசி நாட்களின் விசுவாசிகளின் நடத்தை (பிலிப்பியர் 4:4-9)

1. அவர் கேட்க விரும்புவதை.

2. மேலும் உடனடியாக பதிலளித்து கனப்படுத்துதல்.

இ. வசனம்7. "தேவ சமாதானம்" மேலும் நம்முடைய பரலோக பிதாவை இந்த வழியாக நாம் அணுகும்போது, நாம் இன்னொரு பலனையும் ஆதாயப்படுத்திக் கொள்கிறோம். நாம் வெளிப்படுத்தின விசுவாசமும், நம்பிக்கையும், நன்றி கூறுதலும் தேவ சமாதானத்தை நம் இருதயத்திற்குள் கொண்டு வருகிறது. ஏசாயா நம்மிடம் கூறுகிறார், "தேவனை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதுடையவன் (இடைவிடாமல்) அவரையே நம்பியிருக்கிறபடியால் அவர் அவனைபூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வார்" (ஏசாயா 26:3). "சமாதானம்" என்பது இங்கு சமாதானத்துடன் சேர்ந்திருத்தல், ஒரு அமைதியான ஆவியுடன் இருப்பது, கவலை அல்லது பிரச்சினைகளிலிருந்து இளைப்பாறுதல் என்று அர்த்தமாகும்.

ஈ. வசனம் 7. "எல்லா புத்திக்கும் மேலான". "மேலான". இங்கே நம்முடைய அறிவு பூர்வமாக புரிந்துகொள்ளுதலை அல்லது அறிந்து கொள்ளுதலை விட மேலானதை அர்த்தப்படுகிறது. பரலோகத்திற்குச் செல்வதற்கு முன் இயேசுவானவர் அவருடைய சீடர்களிடம் பேசி அவர்களிடம் சொன்னார்". "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும்பயப்படாமலும்(கஷ்டமானசூழ்நிலைகளின் மத்தியில்) இருப்பதாக" (யோவான் 14:27).

உ. வசனம் 7. "உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்". "காத்துக்கொள்ளும்" என்பது "பாதுகாப்புடன் நில்" என்று அர்த்தப்படும் இராணுவபதமாகும். இரவின் அமைதியான நேரங்களில் எதிரிகளின் எல்லையில் காவல்காக்கும் சேவகனை இது நமக்கு ஞாபகப்படுத்துகிறது. பவுல் கூறுகிறார். "தேவ சமாதானம்" ஒரு சேவகனைப்போல் (பாதுகாவலன்) உன்னுடைய இருதயத்தின் வாசலிலும், மனதிலும் நின்று கிறிஸ்துவின் மீதுள்ள உன்னுடைய விசுவாசத்தையும், நம்பிக்கையையும் சாத்தான் எதிர்பாராத விதமாக உள்ளே நுழைந்து எடுத்து விடாதவாறு தடுக்கிறது."

ஊ. தேவனுடைய வருகை நெருங்கும்போது விசுவாசிகளுக்கும், பொதுவாக இந்த உலகத்திற்கும் காலங்கள் அதிகக் கடினமாக மாறிவிடும். கிறிஸ்து இல்லாதவர்களோடு ஒத்தில்லாதவாறு, இந்தக் கடினமான நாட்களில் நம்முடைய இருதயத்தில் தேவ சமாதானத்தை இவ்வாறிருந்தால் அடையலாம்.

1. எல்லாக் காரியத்தையும் நம் பரலோக பிதாவிடம் ஜெபத்தில் கொண்டு செல்லுதல்.

2. அவரிடம் ஒவ்வொரு நேரமும் நாம் பேசும்பொழுது கடந்தகாலத்திலுள்ள அவருடைய நன்மைக்காகவும், இரக்கத்திற்காகவும் அவருக்கு நன்றி கூறுதல்.

3. விசுவாசிகள் இந்தக் கடைசி நாட்களில் உயர்ந்த, உன்னத காரியங்களைப்பற்றி சிந்திக்கவேண்டும் (4:8-9).

அ. வசனம் 8. "கடைசியாக சகோதரரே" பவுலின் கடிதத்தின் கடைசிப்பகுதி உண்மையாகவே இதுதான். "கடைசியாக" என்று அவர் முன்னர் கூறியுள்ளார். ஆனால் இன்னொரு காரியத்தைப் பற்றி விவாதிப்பதற்கு அறிமுகப் படுத்துவதற்காக நினைவு கூர்ந்ததாகும் (3:1).

இந்தக் கடைசி நாட்களின் விசுவாசிகளின் நடத்தை (பிலிப்பியர் 4:4-9)

ஆ. வசனம்8. "உண்மையுள்ளவைகளெவைகளோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" "அவைகளையே சிந்தித்துகொண்டிருங்கள்" என்பது இந்தக் காரியங்களை நினைவான வாழ்க்கையின் பாடங்களாக்கி, அவற்றைச் சிந்தித்து, நம்முடைய கவனத்தின் மத்தியில் இடைவிடாமல் வைத்திருப்பதை அர்த்தப்படுத்துவதாகும் மேலும் அவை உள்ளடக்குவது. இவ்வாறான காரியங்களை தான்.

1. உண்மை-நியாயமான, நம்பிக்கையான, நேர்மையான.

2. பெருந்தன்மை-மதிப்பிற்குரிய.

3. நீதி-நேர்மையான, தேவனுடைய கண்களில்நீதியாகவும், அவருடைய திருப்திக்குப் பாத்திரராகவும் இருத்தல்.

4. கற்பு-தூய்மையான நல்லொழுக்கமும், பரிசுத்தமும்.

5. அன்பு-மன இசைவுள்ள, சந்தோஷமுள்ள.

6. நற்கீர்த்தியுள்ள-மெச்சத்தக்க,-உயர்ந்த ஒழுக்க மாதிரிகளுக்கு உண்மையுள்ள.

7. மிக நல்லதான-வெகுவாக ஏற்கப்பட்ட, கனப்படுத்தப்பட்ட.

8. புகழுக்குப்பாத்திரராக விசுவாசிகள் மத்தியில் புகழைப் பெறத்தகுதியுள்ள.

இ. வசனம் 9. "நீங்கள் என்னிடத்தில் கற்றும், அடைந்தும், கேட்டும், கண்டும் இருக்கிறவைகளெவைகளோ". "அவர்கள் கற்றும் அடைந்தது" பவுலிடமிருந்து பிலிப்பியர், புத்திமதி வழியாக அடைந்து, அவர்களுக்குச் சொந்தமானதாக ஏற்றுக்கொண்டதைக் குறிக்கிறது. "கேட்டும்கண்டும்". அவர்களுடன் பவுலின் சம்பாஷணைகளையும், அவர்கள் மத்தியில் அவர் வாழ்ந்த வழியையும் குறிக்கிறது. (3:17 -ஐயும், என்னுடைய குறிப்புகளையும் பார்க்கவும்).

ஈ. வசனம் 9. "அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்". இவ்வாறு நாம் இடைவிடாமல் கீழ்கண்ட காரியங்களைச் சிந்தித்து, செயலில் கொண்டு நடத்தினால்.

1. பவுல் நமக்குச் சுருக்கமாக விளக்கியுள்ள நல்லொழுக்க குணங்கள்.

2. அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையிலும், சம்பாஷணைகளிலும் நாம் என்ன கற்றுக்கொண்டோமோ, பெற்றுக்கொண்டோமோ, கேட்டுக் கொண்டோமோ, கண்டுகொண்டோமோ என்பவைகள் "சமாதானத்தின் தேவன் நம்முடைய இருதயத்தில் ஆட்சி செய்கிறார் என்பதை நாம் நிரூபிக்கிறோம். நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டு நம்முடைய வாழ்வுகளில் ஆவியின் கனியை அதிக அளவில் இடைவிடாமல் உற்பத்தி செய்ய முயற்சி செய்கிற பரிசுத்த ஆவியானவர், "தேவ சமாதானம்" என்பது குறிப்பதாகும் (கலாத்தியர் 5:22, 25; 2பேதுரு 1:5-11; 2கொரிந்தியர் 3:18).

உ. பவுல் நம்முடைய எண்ணங்களையும், அதனுடைய நடத்தைக்கும் நடுவிலுள்ள உறவைப் புரிந்துகொண்டார். ஒரு மனிதன் அவனுடைய மனதில் எதை நிரப்ப அனுமதிக்கிறானோ அது சீக்கிரமாகவோ அல்லது தாமதமாகவோ அவனுடைய பேச்சில் கேட்கப்பட்டு, அவனுடைய செயலில் காணப்படும். அவர் கூறுவது இந்தக் காரணத்தினால்தான்.

இந்தக் கடைசி நாட்களின் விசுவாசிகளின் நடத்தை (பிலிப்பியர் 4:4-9)

1. "அத்தகைய காரியங்களைப் பற்றி சிந்தியுங்கள்."

2. "அவற்றைச் செயலில் கொண்டு நடத்துங்கள்."

முடிவுரை

அ. இந்தக்கடைசி நாட்களில் தேவனுடைய வார்த்தையின்படி ஒரு விசுவாசி வாழ்வதற்கு ஒரு தொடர்ந்த போராட்டமாகும். காரியங்கள் நமக்கு அதிகக் கடினமாக மாறியும், அதிக சோதனைகளுக்கு எதிராகப் போராடவும் வேண்டியுள்ளது. அனேக, அதிகமான எதிரான காரியங்களைப் பற்றி நினைக்க வேண்டியுள்ளது.

ஆ. ஆனாலும் நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்து நிற்கலாம், இவ்வாறிருந்தால்.

1. கர்த்தருக்குள் இடைவிடாமல் மகிழ்ச்சியாயித்தல்.

2. நம்முடைய தேவைகளை தேவனுக்கு ஸ்தோத்திரத் தோடே தெரிவித்தல்.

3. உயர்ந்த, உன்னத காரியங்களைப் பற்றி சிந்தித்தல்.

திருப்தியாக இருத்தல்
(பிலிப்பியர் 4:10-13)

அ. பிலிப்பிய விசுவாசிகள் எப்பாப்பிரோதீத்துவின் மூலம் பவுலுக்கு அனுப்பிய பணப்பரிசுகளைப் பற்றி, பவுல் வெளிப்படுத்திய நன்றியினூடே நெய்யப்பட்ட நூலினைப் போன்றது, திருப்தியைக் குறித்த விவாதமாகும் (வசனம் 18). உண்மையாக, பிலிப்பியில் அவர் சபையை ஸ்தாபித்த பிறகு பிலிப்பிய விசுவாசிகள் பவுலுக்கு அனுப்பிய அனேக பரிசுகளில் இது மிகவும் சமீபமானதாகும் (2கொரிந்தியர் 8:1-5).

ஆ. சுவிசேஷத்தின் நிமித்தமாக துன்புறுத்துதலையும், சோதனைகளையும், கஷ்டங்களையும் இந்த வாழ்க்கையில் எதிர்நோக்குகிறவர்களுக்கு இந்தக் கடிதத்தில் "திருப்தியாக இருத்தலைப்" பற்றியுள்ள பவுலின் விவாதம் ஒரு உற்சாகமூட்டுதலாகும்; நாம் திருப்தியாக இருக்கலாம்:

1. எந்த நிலையிலும், ஒவ்வொரு நிலையிலும்

2. ஏனென்றால் கிறிஸ்து அவர்களைப் பெலப்படுத் துகிறார்.

3. ஏனென்றால் வேறு விசுவாசிகள் அவர்களுக்காக, அவர்களுடைய அக்கறையைக் காண்பிப்பார்கள்.

1. எந்த நிலையிலும், ஒவ்வொரு நிலையிலும் நாம் திருப்தியாக இருக்கலாம் (4:11-12).

அ. வசனம் 11இ. "நான் எந்த நிலைமையிலிருந்தாலும், மன இரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்". "திருப்தியாக இருத்தல்" என்பது போதுமானதைப் பெற்றுக்கொண்டதையும், தகுந்த அளவு வருமானம் உடையபதையும், மேலும் உதவி தேவைப் படாததையும் அர்த்தப்படுத்துகிறது. சுவிசேஷத்துடன் சம்பந்தப்பட்ட அவருடைய நிறையப் பிரச்சனைகளினாலும், சோதனைகளினாலும், பவுல் திருப்தியாக இருக்கக் கற்றுக் கொண்டார், இதற்காகக் கவலைப்படாமல்:

1. அவர் தன்னைத் தான் கண்டு கொள்ளக் கூடிய சூழ்நிலைகளில்.

2. அவரிடம் இருந்திருக்கக்கூடிய உலக பிரகாரமும், சரீரப் பிரகாரமுள்ள ஆதாயங்களின் தொகை.

ஆ. வசனம் 12. "தாழ்ந்திருக்கவும்...வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்". இது பவுலுக்கு நிறைய புசிக்க இருப்பதையும், ஒரு உணவினால் நிரம்பின வயிற்றையும், சரீர பிரகாரமாக திருப்திப்படுதலைக் குறிப்பதாகும். பவுல் இப்படி இருப்பது எவ்வாறென்று தெரிந்திருந்தார்.

1. பசியாக இருப்பது.

2. நிறைய புசிக்கக்கூடிய உணவு இருப்பது.

இ. வசனம் 12. "எவ்விடத்திலும், எல்லாவற்றிலும், திருப்தியாயிருக்கவும்"... பவுல் "போதிக்கப்பட்டேன்" என்று கூறும்பொழுது, இவ்வாறு செய்துள்ளனர் என்று அர்த்தப்படுத்துகிறார்.

1. அவருடைய ஞானத்தை பெருக்கியுள்ளார்.

2. விசாரணையினாலும், கவனித்தலினாலும் ஒரு புரிந்து கொள்ளுதலுக்குள் வருதல். அவர் தன்னுடைய சூழ்நிலைகளைப் பற்றியும், சரீர, உலக பிரகாரமான தேவைகளைப் பற்றியுள்ள அக்கறைகளிலிருந்து விடுதலை பெறும் இரகசியத்தைக் கற்றுக் கொண்டார்.

திருப்தியாக இருத்தல்

(பிலிப்பியர் 4:10-13)

இந்த இரகசியம், நிச்சயமாகவே அவருடைய பூரணமான, இடைவிடாத கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கை தான்.

ஈ. பவுல் அவருடைய ஊழிய பயணங்களில் எதிர்நோக்கின சில பிரச்சினைகள் அவருடைய கொரிந்தியருக்கு எழுதின இரண்டாவது கடிதத்தில் நமக்கு சுருக்கமாக விளக்கியுள்ளார் (2கொரிந்தியர் 11:24-28).

உ. பவுல், அவருடைய ஊழிய பயணங்களில் எதிர் நோக்கின பிரச்சினைகள், இன்றைக்கு வேறுவிசுவாசிகள் சீனாவிலும், வியட்நாவிலும், லாவோசிலும், கம்போடியாவிலும், வடகொரியாவிலும், மத்திய கிழக்கிலும், வட ஆப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும், பங்களாதேஷிலும், பர்மாவிலும், நேப்பாளத்திலும் எதிர் நோக்குகிறதைப் போல உள்ளது. மேலும், காரியங்கள் அமெரிக்காவில் இருப்பது போல் நீடித்தால், அனேக விசுவாசிகள் இதுபோன்ற சூழ்நிலைகளையும், அந்த நாட்டிலும் எதிர்நோக்க வேண்டும்!.

ஊ. ஆனாலும், அவர்கள் பவுலைப்போலவும், மக்கள் உரிமை மூடப்பட்ட நாடுகளிலுள்ள விசுவாசிகளைப் போலவும் அவர்களுடைய பிரச்சனைகள் மத்தியிலும் உலக பிரகார, சரீரதேவைகளிலும் திருப்தியாக இருக்கலாம். நான் தனிப்பட்டவிதமாக தீவுகளற்ற சீனாவிலுள்ள இரகசிய "வீட்டு சபைளில்" விசுவாசிகள் மத்தியில் இதைப் பார்த்திருக்கிறேன்.

2. கிறிஸ்து நம்மை பெலப்படுத்துவதால் நாம் திருப்தியாக இருக்கலாம் (4:13).

அ. "நான் எல்லாவற்றையும் செய்ய முடியும்" "எல்லாவற்றையும்" என்பது எல்லா நல்ல பயனுள்ள காரியங்களையும், விசேஷமாக சுவிசேஷத்துடன் சம்பந்தப்பட்ட காரியங்களையும் குறிக்கிறது. "எல்லாவற்றையும் செய்ய" அர்த்தம் என்னவெனில் நான் எல்லா நல்ல பயனுள்ள காரியங்களையும் நன்றாகச் செய்யமுடியும்.

ஆ. "கிறிஸ்துவினாலே". உயிருள்ள, மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்துவிடம் உள்ள இடைவிடாத ஐக்கியமும், நெருங்கிய உறவும் தான், திருப்தியாக இருப்பதிலும், எல்லாக் காரியங்களையும் நன்றாகச் செய்வதிலும் உள்ள இரகசியம் எப்பொழுதெனில் நாம்:

1. சுவிசேஷத்திற்காக நம்முடைய வேலைகளையும் வாழ்க்கையிலுள்ள கஷ்டமான சூழ்நிலைகளையும் எதிர்நோக்குதல்.

2. குறைவான, உலக பிரகாரமான, சரீர பிரகாரமான ஆதாயங்களைப் பகிர்வதற்கு வைத்திருத்தல்.

இ. "என்னை பெலப்படுத்துகிற". "பெலம்" இங்கு வல்லமை தருவதை, செய்யக்கூடிய, சக்தியளிக்கக் கூடிய என்று அர்த்தமாகும். பவுலின் அநேக சோதனைகளிலும், துன்பங்களிலும் கிறிஸ்து ஒரு இடைவிடாத பெலத்தின் மூல காரணமாக இருந்தார். கொரிந்தியருக்குள்ள அவருடைய இரண்டாவது கடிதத்தில் அவர் கூறுகிறார், "ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும் நிந்தைகளிலும், நெருக்கங்களிலும் நான் பிரியப்படுகிறேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்". (எனக்குப் பெலத்தைக் கொடுக்கிற கிறிஸ்துவினாலே) (2கொரிந்தியர் 12:9-10; யோவான் 15:5; எபேசியர் 3:16-17; கொலோசெயர் 1:11).

ஈ. தன்னுடைய சொந்த பெலத்தினால் ஒரு காரியங்களையும் செய்ய முடியாது என்று கர்த்தருக்கு வாக்குக் கொடுத்த விசுவாசி அறிந்து கொள்ள ரொம்ப காலமாகாது.

திருப்தியாக இருத்தல்
(பிலிப்பியர் 4:10-13)

உண்மையாக,கிறிஸ்துவை விட்டு எவ்வாறு அவிசுவாசிகள் தொடர்ந்து வாழ்கிறார்கள் என்று அவன் ஆச்சரியப்படத் தொடங்குகிறான்! மன சமாதானத்தை அடைவதற்கும் அல்லது உலகத்தை கட்டுப்படுத்துகின்ற தீய ஆவிக்குரிய சக்திகளுக்கு எதிராக நிற்பதற்கும் மனித பெலமும், ஞானமும் போது மானதென்று நான் கண்டதில்லை! நீங்கள் கண்டிருக்கிறீர்களா?

3. நாம் திருப்தியாக இருக்கலாம் ஏனென்றால் வேறு விசுவாசிகள் அவர்களுடைய அக்கரையை நம் மீது காட்டுகிறார்கள் (4:10-11).

அ. வசனம்10. "என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மன மலர்ந்தபடியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன்". "மறுபடியும் மன மலர்ந்த விசாரிப்பு" நீண்ட, குளிரான, பனிக்காலத்திற்குப் பிறகு மலர்கின்ற செடிகளையும், பூக்களையும் வைத்து இங்கே விளக்கப்படலாம். (எசேக்கியேல் 17:24). பிலிப்பிய விசுவாசிகள் எப்பாப்பிரோதீத்துவிடம் பரிசுகளை அவருக்கு அனுப்பியதன் மூலம் பவுலுக்கு "மறுபடியும் மனமலர்ந்த விசாரிப்பைக்" காண்பித்தார்கள்.

ஆ. பவுலுக்குப் பரிசுகளை அனுப்புவதற்கு ஏற்பட்ட தாமதம் பிலிப்பிய விசுவாசிகளின் தவறே இல்லை. இவர்கள் அவரைப்பற்றி மறந்து விட்டார்கள் என்பதனாலோ அல்ல, அல்லது அவரைப் பற்றிய இன்னும் அக்கரை இருக்காததினாலோ அல்ல. பவுல் வேறு பட்டணத்தில் ஊழியம் செய்து கொண்டிருக்கும் பொழுது அவருக்கு இடைவிடாமல் அனுப்புகின்ற பரிசுகளினால் இது தெளிவாகிறது (2கொரிந்தியர் 8:1-5; 11:9).

இ. பவுல் எருசலேமில் கைது செய்யப்பட்டதும், சிசெரியாவுக்கு அவர் மாற்றப்பட்டதும், பெலிக்ஸ், பெஸ்டஸ், அகிரிப்பா முன்னர் உள்ள விசாரணைகளும், பாலஸ்தீனாவிலிருந்து ரோமாபுரிக்குள்ள (பவுல் இந்தக் கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கும் நேரம் அவர் சிறையிலிருந்த இடம்). அவருடைய தடைப்பட்ட, குறித்த நேரப்படியில்லாத அவருடைய பிரயாணமும், அவருடைய சிறையிருப்பைப்பற்றி அவர்கள் அறிந்து கொள்ளும் முன்னால் பவுல் எங்கிருந்தார் என்று பிலிப்பிய விசுவாசிகளுக்குச் சரியாகத் தெரிந்து கொள்வதற்கு மிகவும் கடினமாக இருந்திருக்கும் (அப்போஸ்தலர் 21:27-28:16).

ஈ. வசனம் 10. "இப்படிச் செய்ய எண்ணிக் கொண்டிருந்தீர்கள், சமயம் மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை." இதன் அர்த்தம் என்னவெனில், பிலிப்பிய விசுவாசிகள் பவுலைப்பற்றி சிந்திக்கின்றனர், அவர்களிடம் நல்ல நோக்கம் இருக்கிறது, பவுலுக்கு உதவி செய்ய ஒரு உண்மையான ஆவலும் இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு சமயம் மாத்திரம் நேரிடவில்லை (ஒரு சரியான தருணம், அனுகூலமான சூழ்நிலைகள்).

உ. வசனம் 11ஆ "என் குறைச்சலினால் நான் இப்படி சொல்கிறதில்லை". பவுல் ரோமாபுரியில் சிறையில் இருந்தபோது அவருக்கு சந்தேகமில்லாமல் அனேக தேவைகள் இருந்தன. அவர் தன்னுடைய ஊழிய சபைகளைச் சந்திக்க முடியாமலும், அவருக்கு உதவி கிடைக்கிற அவருடைய தொழிலிலும் வேலை செய்ய முடியாமலும் இருந்தது. ஆனாலும், கேள்வி இதுதான்: எதனால் பவுல் சொன்னார்? "என் குறைச்சலினால் இப்படி சொல்கிறதில்லை."

ஊ. அவர் அனேகமாகக் கூறினது எதனால் என்றால், நம்மில் அனைவரைப் போல, அவர்:

1. வேறு விசுவாசிகள் அவரை நேசித்தார்கள் என்பதைத் திரும்பவும் உறுதிப்படுத்த தேவையாக இருந்தது.

திருப்தியாக இருத்தல்
(பிலிப்பியர் 4:10-13)

2. அவரையோ, அவருடைய ஊழியத்தையோ கைவிடவில்லை என்று நிரூபிக்குமாறு அவர்களுடைய அன்பின் வெளிப்படுத்துதல்கள் தேவையாயிருந்தது.

3. சில நேரங்களில் வேறு விசுவாசிகளிலிருந்து தனிப்படுத்தப்பட்டு, மற்றவர்களின் கூட்டுறவும் அது அவருக்குக் கொடுத்த பெலமும் தேவையாயிருந்தது.

எ. ஆகையால் பவுல் திருப்தியாக இருந்தார், கிறிஸ்துவானவர் அவரை பெலப்படுத்தினது மட்டுமல்லாமல் ஊழிய சபைகளிலுள்ள விசுவாசிகள் அவரை இடைவிடாமல் நேசிக்கிறார்கள் என்று அறிந்தாலும், அவரை அவர்கள் கண்டு கொள்ளும் போதும், அவருடைய சரீர உலக பிரகாரமான தேவைகளைச் சந்திக்க விருப்பமாக இருக்கிறார்கள் என்றும் அறிந்தாலும் அவர் பெலத்தைப் பெற்றுக் கொண்டார்.

முடிவுரை

அ. எல்லா விசுவாசிகளும், பவுல் அவருடைய ஊழிய பிரயாணங்களில் எதிர் நோக்கினதைப் போலுள்ள கடினமான சூழ்நிலைகளை எதிர் நோக்குகிறார்கள். மேலும் அவர்கள், பவுலைப் போல் எல்லா நிலையிலும், ஒவ்வொரு நிலையிலும் திருப்தியாக இருக்கலாம், ஏனென்றால்:

1. கிறிஸ்துவானவர் அவர்களை இடைவிடாமல் பெலப்படுத்துகிறார்.

2. வேறு விசுவாசிகள் அவர்களுடைய தேவையின் நேரங்களில் உதவி செய்து அவர்களுடைய அன்பையும், அக்கறையையும் காண்பிக்கிறார்கள்.

ஆ. கிறிஸ்துவோடு ஐக்கியமாக இருப்பதும் தொடர்ந்து ஒரு நெருங்கிய உறவை வைத்துக்கொள்வதும் ஒவ்வொரு விசுவாசியின் கடமையாகும்.தேவையிலிருக்கிற அவர்களுடைய சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் உதவி செய்வதும் ஒவ்வொரு விசுவாசியின் கடமையாகும்.

இ. கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் நம்முடைய சகோதர, சகோதரிகளின் மீது நாம் காட்டுகிற நம்முடைய அக்கறை மாறாமலிருந்தால் அவர்கள் தங்களுடைய வாழ்க்கை நிலையையும், சரீர, உலக பிரகாரமான ஆதாயங்களையும் பாராமல் திருப்தியாக இருப்பார்கள்! அவர்களுடைய ஆவிக்குரிய பெலனும், மனபெலனும் அனேக நேரங்களில் நம்மீது சார்ந்திருப்பதாக இருக்கிறது!